வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 23.01.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 23 | பக்கங்கள் : 12

# சகல தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையாக செயல்படுக

## தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடம் இந்திய தூதுவர் சந்தோஷ் வலியுறுத்து



கொழும்பு, ஜனவரி 23

அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையாக செயல்படவேண்டும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தம்மைச் சந்தித்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

11



## இரா. சம்பந்தனிடம் ஆசி பெற்றார் சிறீதரன்!

கொழும்பு, ஜன. 23

இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவராக பொறுப்பேற்ற பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அந்தக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனை நேற்று சந்தித்து ஆசி பெற்றார்.

கொழும்பில் உள்ள இரா. சம்பந்தனின் இல்லத்துக்கு நேற்று சென்ற சிறீதரன் அவரிடம் ஆசி பெற்றார். தொடர்ந்து, கட்சியின் எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும் சம்பந்தனிடம் எடுத்துரைத்தார்.

11

### இந்திய பிரதமர் மோடி தலைமையில்

## ஜெய் சிறீ ராம் கோஷம் முழங்க இராமர் கோயில் கும்பாபிஷேகம்!

அயோத்தி, ஜன. 23

இந்தியாவின் - உத்தரப் பிரதேசம் - அயோத்தியில் புதிதாக அமைக்கப்பட்ட இராமர் கோயில் கும்பாபிஷேகம் நேற்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது.

ஆலயத்தில் பால இராமர் சிலை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு மதியம் 12.20 மணிக்கு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பக்தர்களின் 'ஜெய் சிறீ ராம்' கோஷம் விண்ணைப் பிளந்தது.

இந்த நிகழ்வில் இந்தியா முழுவதும் இருந்து அரசியல் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள், இந்து அமைப்புகளின் தலைவர்கள், விளையாட்டு பிரபலங்கள் மற்றும் துறவிகள்,

11



## இனப் பிரச்னை தீர்வு குறித்துப் பேச மற்றக் கட்சிகளையும் அழையுங்கள்!

### இந்திய தூதுவரிடம் கஜேந்திரகுமார் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 23

இனப் பிரச்னை தீர்வு விடயம் தொடர்பில் பேசும்போது ஏனைய தமிழ்க் கட்சிகளையும் அழைத்துப் பேச வேண்டும் என்று இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அத்துடன், இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்கள் சிங்கள மயமாக்கலுக்கே வழிவகுக்கின்றன என்றும் அவர் இந்தியத் தூதுவரிடம் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று சந்தித்துப் பேசினார். இதன்போதே,

11

## தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பே!

### 2009இற்கு முன்னரான நிலைமை மீளவேண்டும் என்கிறார் சிறீதரன்

திருகோணமலை, ஜன. 23

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு இருந்ததோ அவ்வாறான நிலையை தமிழ் மக்களின் அரசியல் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எய்த வேண்டும். எனவே, தமிழ்த்

11

## அரசியல்வாதி உட்பட ஐவர் சுட்டுக்கொலை!

### அம்பாந்தோட்டையில் பயங்கரம்

கொழும்பு, ஜன. 23

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் - அம்பாந்தோட்டை - பெலியத்தை நுழைவாயிலுக்கு அருகாமையில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஐவர் பலியாகினர்.

டிபென்டர் ரக வாகனத்தில் பயணித்தவர்களை

11

## சுகாதார ஊழியர்களுக்கு ஒரு மாதத்துக்குள் தீர்வு!

### சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 23

மருத்துவர்கள் தவிர்ந்த ஏனைய சுகாதார ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒரு மாத காலத்துக்குள் அவர்களுக்கு சாதகமான பதில் வழங்கப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

11

## யுக்திய நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டும்!

### ஐ. நா. நிபுணர் குழு வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 23

'யுக்திய' நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் - இது குறித்து மீளாய்வு செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போதைப்பொருளுக்கு எதிரான கடுமையான பாதுகாப்பை நடவடிக்கைகளை

11

## ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்கள் உரிய காலத்தில் நடைபெறவுள்ளன!

### ஜேர்மன் தூதுவரிடம் நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

நாட்டில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் உரிய காலத்தில் நடைபெறவுள்ளன.

அத்துடன், இலஞ்சம் மற்றும் ஊழலை கட்டுப்படுத்த தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை ஜேர்மன் தூதுவர் பீலிக்ஸ் நியூமன் நீதி அமைச்சர் விஜதாஸவை அமைச்சின் பணிமனையில் சந்தித்துப் பேசினார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் நடந்து முடிந்த சில மணி நேரங்கள் தான் இருக்கும் ஒரு தொலைபேசி அழைப்பு.

அது 'வட்ஸ் அப்பில் குறூப் கோல்'. பல்வேறு நாடுகளிலுமிருந்து நண்பர்கள் சிலர் ஒன்றாக அழைத்தனர். அவர்களில் அநேகமாக எல்லோருமே ஏதோ ஒரு வகையில் அரசியல் செயல்பாட்டில் இருப்பவர்கள்.

அவர்களில் ஒருவர் முதலில் கேட்டார், "சரி சிறீதரன் வென்றுவிட்டார், இனி அவர் என்ன செய்வார் என்று நினைக்கின்றீர்கள்?".

"அதை அவரிடமல்லவா கேட்கவேண்டும்" என்றேன்.

"இல்லை அவர் என்ன செய்வார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் என்றுதானே கேட்டோம்" என்றார். அப்போது அவருக்கு ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்தினேன்.

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்து முடிந்த பின்னர் அப்போது இந்திய துணைத் தூதுவராக இருந்த நடராஜன், சில ஊடக நண்பர்களையும் சில சிவில் சமூக பிரதிநிதிகளையும் இரவு விருந்துக்கு அழைத்திருந்தார். அந்த விருந்துக்கு இந்த ஊர்க்குருவியையும் அழைத்த போது, யார் யாரெல்லாம் வருகிறார்கள் என்று கேட்க வேண்டியிருந்தது. அவர் அழைக்கப்பட்டவர்கள் பற்றி சொன்னபோது நான் கேட்டேன், அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற ஓர் எம். பியையும் அழைக்குமாறு.

அவரும் தவறாது அவரை அழைத்திருந்தார். அங்கு வைத்து அந்த எம்.பியிடம் கேட்டேன்: "சரி நீங்கள் வென்று விட்டீர்கள் இனி என்ன செய்ய இருக்கிறீர்கள்?" என்று, அதற்கு அந்த எம். பி. சொன்னர், "மற்ற எம். பிமார் என்ன செய்கினமோ அதை நானும் செய்வன்தானே" என்று.

இந்தச் சம்பவத்தை சிறீதரன் என்ன செய்வார் என்று கேட்ட நண்பருக்கு சொன்னதும் அவர் வேறு எதுவும் பேசவில்லை.

அதன் அர்த்தம், தமிழரசு கட்சியில் இதுவரை தலைவர்களாக இருந்தவர்கள் செய்தது போலத்தான் சிறீதரனும் செய்வார் என்பதல்ல. ஆனால், அவர் என்ன செய்வார் என்று நான் எதை நினைக்கமுடியும் என்பது அப்போது எனக்கு தெரிந்திருக்கவில்லை.

ஆனால் அவர், தான் தலைவராக வந்தால் என்னவெல்லாம் செய்வேன் என்பதை பொது வெளியில் அதிகம் சொல்லாவிட்டாலும், தனது கட்சியினர் மத்தியில் தலைவர் தேர்தலுக்கான பிரசாரங்களின்போது சில விடயங்களை சொல்லியிருப்பார். அது என்ன என்பதை அவரை ஆதரிக்க முடிவெடுத்த கட்சி உறுப்பினர்கள் அறிவார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

இதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது. தற்போது உகண்டா சென்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அங்கு வைத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் சந்தித்திருந்த செய்தி நேற்று படங்களுடன் ஈழநாடுவிலும் வெளிவந்திருந்தது.

ஆனால், அவர்கள் இந்தச் சந்திப்பில் வேறு எந்த விடயத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றும் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் குறித்தே முக்கியமாக பேசினரெனவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய நிலையில் ரணில், சஜித், அநுரகுமார என்று மூன்று பிரதான வேட்பாளர்களும் இன்னும் சில வர்த்தக பிரமுகர்களும் போட்டியிடவிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. இந்நிலையில் எந்த ஒரு வேட்பாளரும் ஐம்பது வீதத்தைப் பெறமாட்டார்கள் என்றே நம்பப்படுகின்ற நிலையில், இறுதியில் எவர் ஒருவர் அதிக வாக்குகளைப் பெறுகின்றாரோ அவரே வெற்றிபெறக் கூடிய வாய்ப்புகளே அதிகமாக இருக்கின்றன.

இந்நிலையில், தற்போதைய கருத்துக்கணிப்புகளை மாத்திரம் வைத்துக்கொண்டு பேசுவதானால், அநுரவுக்கே வாய்ப்புகள் அதிகம் என்றும் சிலர் கூறி வருகின்றனர். அவர் மாத்திரமே தேர்தல் பிரசாரத்தை நடத்தி வருவதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்த நிலையில், அவர் வெற்றிபெறுவதை விரும்பாத இந்தியா, அமெரிக்கா போன்ற சக்திகள் ரணில் - சஜித் இடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதையே விரும்புகின்றன என்றும் அதற்கான முயற்சிகளை அமெரிக்க தூதுவர் ஏற்கனவே ஆரம்பித்து விட்டார் என்றும் தெற்கில் செய்திகள் வெளியாகிவரும் நிலையில்,

உகண்டாவில் நடைபெற்ற ரணில் - ஜெய்சங்கர் சந்திப்பிலும் இந்த விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

இந்த முயற்சிக்கு சஜித் தரப்பில் இருந்து பச்சைக் கொடி காட்டப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால், முதலில் ரணிலின் சம்மதத்தைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவாம். அவரை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதற்கு ரணில் சம்மதம் தெரிவித்தால்தானே அவர்கள் தொடர்ந்து தமது முயற்சியை தொடரலாம்.

**- ஊர்க்குருவி.**

# நிதிக் கட்டமைப்பை மறுசீரமைக்கவேண்டும்

## ஜனாதிபதி ரணில் கோரிக்கை

கம்பாலா, ஜன. 23

சர்வதேச ரீதியில் நிதிக் கட்டமைப்பை மறுசீரமைக்க வேண்டிய அவசரத் தேவை தற்போது எழுந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உகண்டாவின் கம்பாலா நகரில் நேற்று ஜிமுன் தினம் ஆரம்பமான ஜி 77 மற்றும் சீனா 3ஆவது தென்துருவ நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"வளர்ந்து வரும் நாடுகளின் மிகப்பெரிய குழுவாக ஒன்றிணைந்து செயல்படுவதும், நாம் எதிர்கொள்ளும் பல சவால்களை சமாளிக்க உலகளாவிய தெற்கின் நிலைப்பாட்டை தொடர்ந்து வெளிப்படுத்துவதும் இன்றியமையாதது.

உலக நிதிக் கட்டமைப்பை முன்னெப்போதையும் விட இப்போது மறுசீரமைக்கப்படவேண்டிய அவசரத் தேவை உள்ளது. பரிஸ் கிளப் மற்றும் லண்டன் கிளப் ஆகியவற்றால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட உலகத்திற்கே நவீன சர்வதேச கடன் தீர்வு மாதிரி மிகவும் பொருத்தமானது.

இன்று, உலகளாவிய கடன், குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளின் கடன், பரிஸ் கிளப் மற்றும் சர்வதேச பிணைமுறிச் சந்தையினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

கையிருப்பிலிருக்கும் நிதி வளங்களை கடன் சேவைகளாகப் பெற்றுக்கொள்ளும் போது பொதுத் தேவைகள், மனித அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்குத் தேவையான செலவுகளுக்கான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இதனால் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இந்த விடயம் தாக்கம் செலுத்துகிறது.

தற்போது காணப்படும் பொது வரைவு விரைவில் கடன் தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு போதுமானதாக இல்லை.

மேற்படி வரைவு மற்றும் நடைமுறையில் காணப்படும் பொருத்தமற்ற தன்மைகள் காரணமாக இலங்கை உள்ளடங்களாக நமது நாடுகள் அனைத்தும் அரச கடன் நெருக்கடிகளை நிவர்த்திப்பதற்கான முயற்சிகளை தாமதிக்க வேண்டியுள்ளது.

நாம் உலக பொருளாதாரம் மற்றும் முதலீடுகளின் இலகுத்தன்மை, உயர்ந்தபட்ச செயற்திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும். ஜி 77 அமைப்பு இந்த செயற்பாடுகளை பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும் - என்றார். (அ)

# ஒடுக்கப்படும் சாமான்ய மக்களின் நலனை தமிழரசு பேணவேண்டும்!

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

மட்டக்களப்பு, ஜன. 23

மேட்டுக்குடிகளின் நலன்களுக்கு அப்பால் ஒடுக்கப்படும் சாமான்ய மக்களின் நலன்பேணும் தலைமையாக தமிழரசு கட்சியின் வரலாற்று பாத்திரமானது புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்று விரும்புவதாக இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவராக சி. சிறீதரன் பொறுப்பேற்றார். இந்த நிலையில், சி. சந்திரகாந்தன் வெளியிட்ட வாழ்த்து செய்தியில்,

தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

நீண்ட நெடிய அரசியல் வரலாற்றை கொண்ட எம் சமூகத்தின் பழம் பெரும் கட்சி ஒன்றுக்கு தலைமை ஏற்றிருக்கும் தங்கள் பயணம் வெற்றுக்கோஷ சித்தாந்த அரசியலுக்கப்பால் தமிழ் மக்களின் நிலம், நிர்வாகம், உரிமை மற்றும் இருப்பு சார்ந்து வெற்றியடைய வேண்டும் என விரும்புகின்றேன். மேட்டுக்குடிகளின் நலன்களுக்கு அப்பால் ஒடுக்கப்படும் அடிமட்ட சாமான்ய மக்களின் நலன்பேணும் தலைமையாக தங்கள் வரலாற்றுப் பாத்திரமானது புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்று விரும்புகிறேன் - என்றுள்ளது. (ஐ)

# பெப்ரவரி முதல் பாடசாலைகளில் தொழில்கல்வி கற்பிக்கும் திட்டம்!

கொழும்பு, ஜன. 23

இந்த வருடம் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு ஆங்கில மொழி உட்பட தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவுடன் தொழில் கல்வியை கற்பிக்கும் வேலைத்திட்டம் பெப்ரவரி முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். உயர்தர கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களை தொழில் கல்வியை நோக்கி வழிநடத்தும் நோக்கில், நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 299 பாடசாலைகளில் இந்தத் தொழில் பயிற்சித் திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது .

இந்த வருடம் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெப்ரவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் திட்டத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பிரதேச செயலகங்களின் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# கோப்பாயில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜன. 23

தேசிய கலை இலக்கியப் பேரவையால் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பதினாறாவது நிகழ்வு கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் புத்தக அரங்க விழாவின் முதல் நாள் நிகழ்வாக எழுத்தாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான இயல்வாணனின் 'யாரும் பாடலாம் என்னை' கவிதைத் தொகுதி நூலின் வெளியீட்டு நிகழ்வு தாயகம் சஞ்சிகையின் ஆசிரியரும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையை சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ. தேவராஜா, நூல் மதிப்பீட்டுரைகளை கவிஞரும் ஆசிரியருமான ந. குகபரன், கவிஞரும் கிராமசேவகருமான வ. வடிவழகையன், ஏற்புரையை நூலாசிரியர் இயல்வாணன் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 5 மணியளவில் 'செம்முகம்' ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில், க. சத்தியசீனின் நெறியாள்கையில் சிறுவர் நாடகங்கள் இரண்டு அரங்கேறவுள்ளன. (ஐ)

Eelanadu
23.01.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், தை 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் பண்பு மாற்றம் அவசியம்

தமிழ்த் தேசிய அரசியலில் புதிய மாற்றம் தேவை. இல்லாவிட்டால், முன்னோக்கிப் பயணிக்க முடியாது. வெறுமனே, தமிழ்த் தேசியம் என்று உச்சரித்துக் கொண்டிருப்பதால் மட்டும் விடயங்களை வெற்றிகொள்ள முடியாது. இன்றிருக்கும் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகள் அனைத்துமே கடந்தகாலத்தின் தோல்வியை சுமந்து கொண்டிருக்கும் அடையாளச் சின்னங்கள்தான். இந்தப் புரிதல் அனைவருக்கும் அவசியம். இல்லாவிட்டால் புதிய சவால்களை வெற்றிகொள்வதற்கான கதவுகளைத் திறக்க முடியாது. வெறுமனே எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது என்று கூறிக் கொண்டிருப்பதால் மட்டும் அரசியலை முன்னெடுக்க முடியாது. தாத்தாவுக்கு யானை இருந்தது வெறும் நினைவுகள் மட்டும்தான். ஆனால், இப்போது நம்மிடம் என்ன இருக்கின்றது என்பதுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டிய விடயம்.

தமிழ்த் தேசிய அரசியலை எடுத்து நோக்கினால், அனைவருமே முன்னர் இடம்பெற்ற ஆயுதப் பிணக்கையும் அதன்போதான நிகழ்வுகளையும் இரை மீட்பவர்களாகவே இருக்கின்றனர். அதுதான் தமிழ்த் தேசியத்தின் அடையாளமாகவும் நோக்கப்படுகின்றது. ஆனால், இது மட்டும்தான் தமிழ்த் தேசியமா?

தமிழ்த் தேசியம் என்பது அனைவரையும் ஒரு நேர்கோட்டை நோக்கி ஈர்ப்பதற்கான கருவியாக இருக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்று என்னும் உணர்வை வழங்கவேண்டும். எங்களுக்குள் கருத்து பேதங்கள் இருக்கலாம் - அது அரசியலில் தவிர்க்க முடியாதது. ஆனால், தமிழ் மக்களின் நலன்களை வெற்றிகொள்ளும் பயணத்தில் நாம் அனைவரும் ஒரு மரத்தின் கிளைகள் என்னும் உணர்வை ஏற்படுத்தும் வகையில் கட்சிகளின் தலைமையின் செயல்பாடுகள் இருக்க வேண்டும். ஆனால், அதனைக் காண முடியவில்லை. உண்மையில் 2009இற்கு பின்னர்தான் தமிழ்த் தேசிய அடிப்படையில் கட்சிகள் முன்னரை விடவும் ஓரணியாக இறுகியிருக்க வேண்டும். அதற்கான தலைமைத்துவத்தை காண்பித்திருக்க வேண்டும் - ஆனால், அது நிகழவில்லை.

ஆனால், இன்று நடந்திருப்பது என்ன? விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக்கூட சம்பந்தனால் பேணிப் பாதுகாக்க முடியவில்லை. சம்பந்தனால் தோல்வியின் வழித்தடத்தில் நகர்த்தப்பட்ட - கட்சியின் புதிய தலைவராகவே சிறீதரன் பொறுப்பேற்றிருக்கின்றார். சம்பந்தனின் தவறுகளை சரி செய்யும் ஒருவராக அவரால் செயலாற்ற முடியுமா? அதற்கான அர்ப்பணிப்பு அவரிடமிருந்து வெளிப்படுமா?

ஒரு பெரும் தோல்விதான் ஒரு சமூகத்தின் பலம் மற்றும் பலவீனத்தை எடுத்துரைக்கும். ஆனால், தமிழ் மக்களின் தலைவர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் எவரிடமும் அதற்கான அரசியல் பண்பு வெளிப்படவில்லை. இதன் விளைவாகவே தொடர்ந்தும் நடைமுறைக்கு சாத்தியமற்ற கதைகளிலும் கற்பனைகளிலுமே தமிழ் மக்களின் அரசியல் நகர்த்தப்படுகின்றது.

செல்வநாயகம் தொடக்கம் பிரபாகரன் வரையில் பல்வேறு அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. செல்வநாயகம் வழிவந்த அரசியல் பாதையால் பயனில்லை என்றுதான் இளைஞர்கள் ஆயுதப் போராட்ட அரசியலை முன்னெடுத்தனர். பயிற்சிக்காக பலஸ்தீனம் வரை சென்றனர். பின்னர், பிராந்திய சக்தியான இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது.

இந்தியாவின் தலையீட்டால் இனப் பிரச்னைக்கான தீர்வாக மாகாண சபை முறையொன்று அறிமுகமானது. இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரையில் தமிழ் மக்களின் சார்பில் கிடைத்த ஒரு விடயம் என்றால் அது மாகாண சபை மட்டும்தான். அதற்கப்பால் போகப் போவதாக பல கதைகள் காலத்துக்குக் காலம் கூறப்பட்டாலும் இன்றுவரையில் நடைமுறையில் எதனையும் - எவரும் நிரூபிக்கவில்லை. இந்த நிலையில் வெற்றுக் கோஷங்களுக்கு அப்பால் அரசியலை முன்னெடுப்பது எவ்வாறு என்றுதான் தமிழ் மக்களின் தலைமைகள் என்போர் சிந்திக்க வேண்டும் - செயலாற்ற வேண்டும். அதற்கான பண்பு மாற்றம் முதலில் ஏற்பட வேண்டும். நாம் தொடர்ந்தும் தோல்வியை மட்டுமே சந்தித்துக் கொண்டிருக்கின்ற ஓர் இனம். எனவே, நாம் முன்னோக்கி செல்ல வேண்டுமாயின் நமக்குள் ஐக்கியமாதல் வேண்டும். அதுதான் தமிழ்த் தேசிய அரசியலில் பண்பு மாற்றத்தின் முதல் படியாகும்.

# யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் விஸ்வ ஹிந்தி திவாஸ் கொண்டாட்டம்

*யாழ்ப்பாணம், ஜன. 23*

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் விஸ்வ ஹிந்தி திவாஸ் 2024 கொண்டாட்டத்தை கடந்த 19ஆம் திகதி துணைத் தூதரக வளாகத்தில் ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வில் இந்தியா கோர்னர் மற்றும் துணைத் தூதரக அதிகாரிகள், ஹிந்தி கற்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



இங்கு உரையாற்றிய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ்,

உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளில் ஒன்றான ஹிந்தி மொழியை கற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து பேசினார், “ஒரு மொழியைக் கற்றுக்கொள்வது பொருளாதார வாய்ப்புகளைத் திறக்கும்” - என்றார்.

இந்திய கோர்னரில் ஹிந்தியில் பயின்று வரும் வட மாகாண தமிழ் மாணவர்களைப் பாராட்டியவர், “மொழியைக் கற்றுக்கொள்வது மக்களைப் புரிந்து கொள்வதற்கு மட்டுமல்லாமல், மொழியுடன் தொடர்புடைய கலாசாரத்தையும் புரிந்துகொள்ள உதவுகிறது” என்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கலாசார நிகழ்ச்சிகள், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய உரைகள், இந்தியா கோர்னர் மாணவர்களின் பாடல் மற்றும் நடனம் என்பவை நடைபெற்றன.

(ஐ)

# சிறுதானிய பொங்கல் விழா சிறுப்பிட்டியில் நடைபெற்றது

*யாழ்ப்பாணம், ஜன. 23*

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தைப்பொங்கல் விழா சிறுதானியப் பொங்கல் விழாவாக சிறுப்பிட்டியில் நடைபெற்றது. சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இராசபோசனம் என்னும் கருப்பொருளில் இந்தப் பொங்கல்விழா கோலாகலமாக நிகழ்ந்தது.



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் பொ. செல்வராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தார்கள்.


தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பாரம்பரிய உணவான சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு சிறுதானிய விதைகளை இலவசமாக வழங்கி அறுவடையின் பின்னர் அவர்களிடமிருந்து வழங்கிய விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகளை மீளப் பெற்று வேறு விவசாயிகளுக்கு வழங்குகின்றது.

இதன் ஒரு படியாகவே அருகிப்போய்விட்ட சிறுதானிய உணவுப்பண்பாட்டை மீளுருவாக்கும் நோக்கில் தைப் பொங்கலைக் கிராமங்களில் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு சிறுப்பிட்டி மேற்கில் ஜனசக்தி சனசமூக நிலையத்தினருடன் இணைந்து கொண்டாடியுள்ளது.

ஏராளமானோர் கலந்து கொண்ட சிறுதானியப் பொங்கல் விழாவில் உறியடி, வழுக்குமரம் ஏறுதல் ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்களோடு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும்.

**மிதுனம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் மற்றும் செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிம்மம்**
உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகச் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்**
உறவினர்களுடன் முன்கோபத்தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**விருட்சிகம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அமோகமான நாள்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும்.அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லை குறையும். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். குடும்பத்தில் உள்ள பிரச்னைகள் நீங்கும். வீண்வாதங்களில் ஈடுபட வேண்டாம். ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்துப் பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

# தமிழையும் தமிழர்களையும் அடையாளமற்றவர்களாக்கும் பா. ஜ. க.

## முதல்வர் ஸ்டாலின் சாடல்

சேலம், ஜன. 23

தமிழகத்துக்கும், தமிழினத்துக்கும் ஆபத்து வந்துவிட்டதால்தான் 'மாநில உரிமைகள் மீட்பு மாநாடு' நடத்துகிறோம். தமிழையும் தமிழர்களையும் அடையாளம் இல்லாதவர்களாக மாற்ற பா. ஜ. க. திட்டமிட்டுள்ளது. விரைவில் மத்தியில் அமையவிருக்கும் 'இந்தியா' கூட்டணி ஆட்சி மாநிலங்களுக்கு உரிமைகள் வழங்கும் சட்டத்தை உருவாக்கும் என்று தி. மு. க. தலைவரும், முதல்வருமான மு. க. ஸ்டாலின் கூறினார்.

சேலத்தில் நேற்றுமுன்தினம் நடந்த இளைஞரணி மாநாட்டில் உரையாற்றுகையிலேயே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தெற்கில் விடியல் பிறந்துவிட்ட நிலையில், வடக்கிலும் விடியல் பிறக்கும். உதயநிதியின் கட்சி, சமூகப் பணிகள் மகிழ்ச்சியளிக்கின்றன. இளைஞரணி என் தாய் வீடு. இளைஞரணியால் உருவாக்கப்பட்டவர்கள் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களாக, மாவட்டச் செயலாளராக உயர்ந்துள்ளனர். எனவே, இளைஞரணியினர் தமிழினம் மற்றும் திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், தி. மு. கவின் திட்டங்களையும், தமிழினத்தை அழிக்க முயலும் சக்திகளையும் அறிந்துகொள்ள வேண்டும்.

தமிழகத்துக்கும், தமிழினத்துக்கும் ஆபத்து வந்துவிட்டதால்தான் 'மாநில உரிமைகள் மீட்பு மாநாடு' நடத்துகிறோம். தமிழையும், தமிழர்களையும் அடையாளம் இல்லாதவர்களாக மாற்ற பா. ஜ. க. திட்டமிட்டுள்ளது. 10 ஆண்டுகால அ. தி. மு. க. ஆட்சி, தமிழகத்தை பாழ்படுத்திவிட்டது.

பா. ஜ. க. திட்டப்படி, கூட்டணிக்கு உள்ளே - வெளியே என அ. தி. மு. க. பகல்வேஷம் போடுகிறது. நாட்டின் ஒற்றுமையைக் காக்க, இந்திய அரசமைப்பை திருத்த வேண்டும். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதே நம் முழக்கம். மக்களவைத் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் அமையவிருக்கும் இந்தியா கூட்டணி ஆட்சி, மாநிலங்களுக்கு உரிமைகள் வழங்கும் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் முயற்சியில் கவனம் செலுத்தும் - என்றார்.

(ஐ)

# இந்துக்களின் உணர்வை பிரதமர் மதிக்கவில்லை

## கனிமொழி எம். பி. சாடல்

சேலம், ஜன. 23

பிரதமர் மோடி இந்துகளின் பாதுகாவலர் என கூறிக் கொண்டு அவர்களின் மன உணர்வை மதிக்காமல் கட்டி முடிக்கப்படாத கோயிலை திறக்கப் போகிறார். இது இந்து மதத்துக்கும், இந்து மக்களுக்கும் எதிரானது என்று கனிமொழி எம். பி. கூறியுள்ளார்.

சேலத்தில் நடந்த தி. மு. க. இளைஞரணி மாநில மாநாட்டில் அந்தக் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம். பி. கூறுகையில்,

பிரதமர் மோடி இந்துகளின் பாதுகாவலர் என கூறிக் கொண்டு அவர்களின் மன உணர்வை மதிக்காமல் கட்டி முடிக்கப்படாத கோயிலை திறக்கப் போகிறார். இது இந்து மதத்துக்கும், இந்து மக்களுக்கும் எதிரானது. அரசியல் இலாபத்துக்காக அவர்கள் எதையும் செய்வார்கள். இது பற்றி கேட்டால் வருமான வரித்துறை, சி. பி. ஐ., அமலாக்கத் துறையை வீட்டுக்கு அனுப்புவார்கள்.

மத்தியில் ஆளும் பா. ஜ. க. தமிழகத்தை எப்போதும் வஞ்சித்து கொண்டே இருக்கிறது. தமிழக மக்கள் மழை வெள்ளத்தில் தத்தளித்த நிலையிலும், மாநில அரசு கேட்ட வெள்ள நிவாரணத்தை தர மறுக்கிறது. குஜராத்தில் வெள்ளம் ஏற்பட்ட போது மத்திய அரசு ரூ. ஆயிரம் கோடியை வழங்கியது. ஏன் தமிழகத்தில் இருப்பவர்கள் மக்களாக அவர்களுக்கு தெரிவதில்லையா - என்று கேட்டார்.

(ஐ)

# இந்து மக்களின் உரிமையை பறிக்க முயன்றால் சட்டவழியில் போராடுவோம்!

## நிர்மலா சீதாராமன்

காஞ்சிபுரம், ஜன. 23

இந்து மக்களின் உரிமையைப் பறிக்க முயற்சி நடந்தால் சட்டபூர்வமாக போராடுவோம் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அயோத்தி இராமர் கோயில் நிகழ்ச்சி காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலில் எல். இ. டி. திரையின் மூலம் இன்று சிறப்பு நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்றார்.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் தெரிவித்த பிறகே எல். இ. டியில் பார்க்க முடிந்தது. செய்யும் முறையை மாற்றிக் கொள்ளாமல் மக்களை கஷ்டப்படுத்தி இருக்கிறது தி. மு. க. அரசு.

எல்இடி தொழில் செய்யும் வியாபாரிகள் அனைவரும் அரசின் அடக்குமுறையால் கஷ்டப்பட்டார்கள். காவல் துறையை கையில் வைத்துக் கொண்டு ஆதிக்கத்தை காட்ட முயற்சி செய்தது அறநிலையத் துறை. இந்து மக்களின் உரிமையைப் பறிக்க முயன்றால் சாலையில் இறங்கி கத்தும் செயல்களில் ஈடுபட மாட்டோம். இந்து மக்களின் உரிமையைப் பறிக்க முயற்சி நடந்தால் சட்டபூர்வமாக போராடுவோம் - என்றார். (ஐ)

# “தி. மு. கவை வழிநடத்தும் ஆற்றல் உதயநிதிக்கு உண்டு!”

சேலம், ஜன. 23

தி. மு. கவை அடுத்து வழி நடத்தும் ஆற்றல் உதயநிதிக்கு உண்டு என சேலத்தில் நேற்று முன்தினம் நடந்த இளைஞரணி மாநாட்டில் தி. மு. கவின் பொதுச்செயலாளர் துரைமுருகன் பேசினார்.

மேலும், சென்னையில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டில் பார்வையாளராக கலந்து கொண்டிருக்கிறேன். அதன் பின்னர், தி. மு. கவின் அனைத்து மாநாடுகளிலும் கலந்து கொண்டுள்ளேன். ஆனால், தற்போது நடைபெற்ற இளைஞரணி மாநாடு போல பெரிய பிரமாண்ட மாநாட்டை கண்டது இல்லை.

நூறு ஆண்டு கால திராவிட இயக்கத்தில் கருணாநிதி 50 ஆண்டுகள் தலைவராக இருந்தார். இப்போது, ஸ்டாலின் தலைவராக உள்ளார். இங்கு பேசியவர்கள், தி. மு. கவை அடுத்த நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லும் ஆற்றல் உதயநிதிக்கு உண்டு என குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன். அதை சொல்வதற்கு உரிமையும், தகுதியும் எனக்கும் உண்டு - என்றார். (ஐ)

# பொலிஸ் திணைக்களம் என்பது மக்களை கொல்லும் நிறுவனமா?

## கேள்வி எழுப்புகிறார் ரில்வின் சில்வா

**கொழும்பு, ஜன. 23**

**பொலிஸ் திணைக்களம் என்பது மக்களை சுட்டுக் கொல்லும் நிறுவனம் அல்ல, நாரம்மல துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், பதில் பொலிஸ்மா அதிபரும் பொறுப்புக்கூற வேண்டும் _ என்று தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா கூறியவை வருமாறு,

“பொலிஸார் சிவில் உடையில் சென்று மக்களை சுட்டுக் கொலை செய்யும் அராஜக நிலை உருவாகியுள்ளது. நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. ஆனால் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு பணத்தை வழங்கி பிரச்சினையை மூடி மறைப்பதற்கு பதில் பொலிஸ்மா அதிபர் முற்படுகின்றார். உயிரிழந்த நபரின் உயிருக்கான பெறுமதி ரூ. 10 லட்சமா?

பொலிஸார் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டுவருகின்றனர், ஆட்சியாளர்களே பொலிஸாரை இந்நிலைக்கு தள்ளியுள்ளனர். தமது அரசியல் எதிராளிகளுக்கு எதிராக பொலிஸாரை பயன்படுத்துகின்றனர், சட்டத்துக்கு அப்பால் சென்று தாம் கூறுவதை செய்யுமாறு ஆட்சியாளர்களால் அரச அதிகாரிகள் தூண்டப்படுகின்றனர். இப்படியான சம்பவங்கள் அதன் வெளிப்பாடுதான்.

நாரம்பல துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை சாதாரண சம்பவமாக கருதிவிட முடியாது. வாகனத்தை நிறுத்தாவிட்டால் பொலிஸார் சூடுநடத்துகின்றனர் எனில் அது பாரதூரமான விடயமாகும். பொலிஸாரை அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தியதாலேயே இப்படி செயற்படும் நிலை உருவாகியுள்ளது.

நாட்டில் பொலிஸ்மா அதிபர் இல்லை, பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டியவர்களுக்கு எதிராக மனித உரிமைமீறல் உட்பட பல குற்றச்சாட்டுகள் உள்ளன. பொலிஸ் அதிகாரியை கைது செய்தவுடன் இந்த பிரச்சினை தீராது, பதில் பொலிஸ்மா அதிபரும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். தற்போது யுக்திய நடவடிக்கைகூட சட்டத்துக்கு புறம்பாகவே இடம்பெற்று வருகின்றது.

பொலிஸ் திணைக்களம் என்பது மக்களை சுட்டுக்கொல்லும் நிறுவனம் அல்ல, அது மக்களை காக்கும் துறை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.” - என்றார். (அ)

# தயாசிறிக்கு எதிரான தடை நீடிப்பு!

*கொழும்பு, ஜன. 23*

சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவின் விவகாரங்களில் தலையிடுவதைத் தடுக்கும் வகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகரவுக்கு பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை வரும் 29ஆம் திகதி வரை நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அதன் பதில் செயலாளர் நாயகம் துஷ்மந்த மித்ரபால ஆகியோர் சமர்ப்பித்த மனுவொன்று நேற்று மீள அழைக்கப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, நீதிமன்றில் உண்மைகளை முன்வைத்ததுடன், இந்த தடை உத்தரவு தொடர்பான ஆட்சேபனைகளை பிரதிவாதிகள் முன்வைத்தால் அதனை எதிர்வரும் 29ஆம் திகதி அழைக்குமாறும் கோரினார்.

இதன் பிரகாரம், உரிய ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய பிரதிவாதிகளுக்கு அனுமதியளித்த நீதிமன்றம், பின்னர் மனுவை எதிர்வரும் 29ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டது.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், அதன் பொதுச் செயலாளராக கடமையாற்றிய தயாசிறி ஜயசேகர அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதவியின் பணிகளை மேற்பார்வையிட துஷ்மந்த மித்ரபால நியமிக்கப்பட்டதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை வெளியிடப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருந்த போதிலும், பதில் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவின் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தயாசிறி ஜயசேகர, தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தவறான பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளார்.

(அ)

# தம்பியை கொலை செய்த அண்ணன்

## பொரளையில் பயங்கரம்

*கொழும்பு, ஜன. 23*

தனது தம்பியை அண்ணன் கத்தரிக்கோலால் குத்திக் கொலை செய்த கொடூர சம்பவமொன்று பொரளை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பௌரளை பகுதியைச் சேர்ந்த 55 வயது நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மது அருந்திக்கொண்டிருந்தவேளை குறித்த நபருக்கும், அண்ணனுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, பின்னர் அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போதே அவர் தம்பியை கத்தரிக்கோலால் குத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (அ)

# போதைப்பொருளை விற்பனை செய்யும் வலையமைப்பில் 65 வீதமானோர் கைது!

*கொழும்பு, ஜன. 23*

இலங்கைக்கு கடல் மார்க்கமாக வரும் போதைப்பொருட்களை பகிர்ந்தளிக்கும், விற்பனை நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களின் வலையமைப்பில் உள்ள 65 வீதமானோர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர், ஏனையோரும் விரைவில் மடக்கிபிடிக்கப்படுவார்கள் - என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“இலங்கையில் 1982 இல்தான் முதன்முறையாக ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அதுவும் சுற்றுலா வழிகாட்டியொருவர், ஆனால் இன்று பாடசாலை செல்லும் வயதில் உள்ள மாணவர்கள் அதனை பாவிக்கும் அளவுக்கு சமூகத்துக்குள் போதைப் பொருள் ஊடுருவியுள்ளது. ஐஸ் போன்ற இரசாயன போதைப்பொருட்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளது.

எனவே, போதைப்பொருட்களுக்கு முடிவுகட்டும் நோக்கில்தான் யுக்திய நடவடிக்கை ஆரம்பமானது, இலங்கை பொலிஸாரால் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்திலேயே யுக்திய நடவடிக்கை செயற்படுத்தப்படுகின்றது. வெளிநாடுகளில் இருந்து கடல்வழியாக இலங்கைக்கு கடத்தப்படும் போதைப்பொருட்களை கிராமங்களுக்கு பகிரும், விற்பனை செய்யும் வலையமைப்பில் உள்ளவர்கள் குறிவைக்கப்பட்டனர்,

அவர்களின் பெயர் விவரம் இலங்கையில் உள்ள 45 பொலிஸ் பிரிவுகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன, இந்த வலையமைப்பில் உள்ள 60 வீதமானோர் யுக்திய ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர், ஏனையோரும் இரண்டாம் மாத யுக்திய நடவடிக்கையின்போது கைதுசெய்யப்படுவார்கள், போதைப்பொருள் விற்பனைக்கு முடிவுகட்டி, மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழல் உருவாகும்வரை யுக்திய நடவடிக்கை தொடரும்.” - என்றார். (அ)

# சிறைக்கு செல்லவும் தயார்!

## மிரட்டுகிறார் இராஜாங்க அமைச்சர்

*கொழும்பு, ஜன. 23*

“எவரேனும் என்னிடம் சண்டித்தனம்காட்ட முற்பட்டால் தாக்கிவிட்டு சிறைச்சாலைக்கு செல்வேனேதவிர, அடிவாங்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு செல்லமாட்டேன்.”- என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பிரதேச மக்கள் வெளியிட்ட கடும் எதிர்ப்பு காரணமாக அங்கிருந்து வெளியேறினார். அவருக்கு எதிராக மக்கள் கோஷங்களையும் எழுப்பி இருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட சனத் நிஷாந்த கூறியவை வருமாறு,

“ ஆனமடுவ பகுதியில் இருந்து நான் புறப்படும்போது கற்பிட்டியில் இருந்து அழைப்பு வந்தது, மகனே, இங்கு பிரச்சினையொன்று எற்பட்டது, அது உங்களுக்கு எதிரானது அல்ல, கூட்டத்துக்கு வரவேண்டாம், கூட்டம் முடிந்துவிட்டது என அருட்தந்தையொருவர் எனக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரியப்படுத்தினார்.

முதலாவது கூட்டத்துக்கு நான் செல்லவில்லை, இரண்டாவது கூட்டத்துக்கே சென்றிருந்தேன், மக்கள் என்னை விரட்டினார்கள் என்ற செய்தியை ஊடகங்கள் வாயிலாகவே அறிந்தேன். இது போலியான தகவல், இதனை நிராகரிக்கின்றேன்.

சண்டித்தனம்காட்டி எம்மை விரட்டினால் , அதற்கு அஞ்சி திரும்பி வருபவர்கள் அல்லர் நாங்கள், அடிவாங்கி வைத்தியசாலையில் இருக்க போவதில்லை. தாக்கிவிட்டு சிறைக்குதான் செல்வேன். தேர்தல்மூலம் வேண்டுமென்றால் மக்கள் எம்மை வீட்டுக்கு அனுப்பலாம். ஆனால் சண்டியர்களுக்கு விட்டுபோக தயாரில்லை.

நாங்கள் வீட்டில் இல்லாத நேரம் எமது வீட்டை எரித்தனர், நான் வீட்டில் இருக்கவில்லை, எனது சகோதரரும் சிறையில் இருந்தார், எனவே, வீட்டை கொளுத்தியும் எம்மை அச்சம்கொள்ள வைக்க முடியாது. ஜே.வி.பியினருக்கு எம்மை விரட்ட வேண்டிய தேவை இருந்தால் நேரில் வரட்டும், பழைய கணக்குகளையும் தீர்க்க வேண்டியுள்ளது.” - என்றார்.

(அ)

# தமிழ்பேசும் மக்கள் கூட்டணி!

## தமிழரசின் புதிய தலைவருக்கு வேலுகுமார் அழைப்பு

*கொழும்பு, ஜன, 23*

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் சமூகங்களை அரவணைத்துக்கொண்டு , பலமானதொரு தமிழ் பேசும் மக்களின் சக்தியாக முன்னோக்கி பயணிப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் ஓர் உறவு பாலமாக இருப்பாரென நம்புகின்றோம் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வேலுகுமார் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு தமது வாழ்த்துகளையும் வேலுகுமார் எம்.பி. தெரிவித்துள்ளார்.



“இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் மலையகத்துக்கும் இடையிலான உறவு பல தசாப்தங்களாவே தொடர்கின்றன. தமிழரசுக் கட்சியின் தலைமைப்பதவியில் இருந்தவர்களெல்லாம் மலையகத் தமிழர்களையும் அரவணைத்துக் கொண்டே பயணித்துள்ளனர், அவர்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடுதலைக்காக குரலும் கொடுத்துள்ளனர்.

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் சமூகங்களுக்கு ஒற்றுமை என்பமே பெரும் சக்தியாக உள்ளது, அந்த ஒற்றுமையை சீர்குலைக்க பேரினவாத சக்திகள் முற்பட்டுவருகின்றன. எனவே, இலங்கையில் வாழும் அனைத்து தமிழ் பேசும் சமூகங்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். அதற்கான ஓர் உறவு பாலமாக தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் இருப்பார் என நம்புகின்றோம்.

தலைமைப்பதவியில் இருந்துகொண்டு, தமது சேவைகளை அவர் சிறப்பாக முன்னெடுக்கவும் வாழ்த்துகளைக் கூறிக்கொள்கின்றேன்.” - என்றும் வேலுகுமார் எம்.பி. குறிப்பிட்டார். (அ)

# வெளியுறவு அமைச்சு அழுத்தத்தாலேயே இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்!

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

மன்னார், ஜன. 23

**வெளிவிவகார அமைச்சின் அழுத்தத்தினாலேயே கடற்றொழில் அமைச்சர் இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு இணங்கியிருக்கலாம் என சந்தேகம் எழுவதாக வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.**

மீனவர்களின் விடுவிப்பிற்கு வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களில் வட மாகாணத்தின் பல்வேறு கடற்பகுதிகளில் 40 இற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் கடற்றொழில் அமைச்சின் பரிந்துரைக்கமைய நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவல் கடற்றொழில் அமைச்சரின் நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னரும் இந்திய நிதியமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க எந்தவித சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தாமல் 20 இந்திய மீனவர்கள் விடுக்கப்பட்டிருந்தனர்.

அதன்போது வடக்கிலுள்ள மீனவர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

எனவே பரிந்துரைகளின் அடிப்படையில் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்படுவார்களேயானால், அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்து இந்த மீனவர்களை கைது செய்ய வேண்டுமென வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நல்லிணக்க அடிப்படையில் மீனவர்களை விடுவிப்பது தவறு என கருதவில்லை, எனினும் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் தவறுகளில் ஈடுபடும்போது நல்லிணக்கம், மனிதாபிமானம் பற்றி பேசுவதில்லை பயனில்லை எனவும் இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய தேவை இல்லை

**விவசாய அமைச்சர்**

கொழும்பு, ஜன. 23

தேவையான அளவு அரிசியை நாட்டிலேயே உற்பத்தி செய் ணவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்யும் வகையில், நாட்டிற்குள் அதிகளவு அரிசியை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

2022 ஆம் ஆண்டில், நாட்டின் அரிசி தேவையில் மூன்றில் ஒரு பங்கு இறக்குமதி செய்யப்பட்டது.

இந்தநிலையில், நாட்டுக்குத் தேவையான அரிசியின் அளவு தற்போது நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்

# 24 மணி நேரத்தில் 910 பேர் கைது!

கொழும்பு, ஜன. 23

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 910 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 676 பேரும், குற்றப் புலனாய்வு பிரிவினால் அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள 234 பேரும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களில் 17 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான இரண்டு பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் காவல்துறை போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் விசேட பணியகத்தினால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 19 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# விசேட வைத்திய நிபுணருக்கு பிணை!

கொழும்பு, ஜன. 23

கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புற்றுநோய் விடுதிக்கு பொறுப்பான விசேட வைத்திய நிபுணர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று காலி நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி நாடு முழுவதும் இடம்பெற்ற சுகாதாரப் பணியாளர்களின் போராட்டத்தில் புற்றுநோய் விடுதி பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தநிலையில், குறித்த வைத்திய நிபுணருக்கும் சுகாதார பணியாளருக்கும் இடையில், கருத்து முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில், தாக்குதல் சம்பவம் ஒன்றும் பதிவாகியிருந்தது.

அதன்படி, கைது செய்யப்பட்ட விசேட வைத்திய நிபுணரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க காலி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.



# தமிழரசு கட்சி தலைவரான சிறிதரன் கனகபுரம் துயிலுமில்லத்தில் அஞ்சலி!

கிளிநொச்சி, ஜன. 23

தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெற்றதை தொடர்ந்து வரவேற்பு இடம்பெற்றது. (அ)

# கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் மனு 31ஆம் திகதி பரிசீலனைக்கு

கொழும்பு, ஜன. 23

பதில் காவல்துறைமா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனம் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை எதிர்வரும் 31ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

பதில் காவல்துறைமா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்த பதவியில் இருந்து நீக்குமாறும், அவரை காவல் துறைமா அதிபராக நியமிப்பதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் குறித்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு, நீதியரசர்களான பிரீதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே, குறித்த மனு விசாரணைக்காக திகதியிடப்பட்டுள்ளது.

# மரக்கறி விலையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 23

சந்தையில் மரக்கறிகளின் விலை கடந்த 5 நாட்களில் 40 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அனுர சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து பதிலீட்டு உணவுகளை நாடியமையால் மரக்கறிகளின் விலை குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக சந்தையில் 2,500 ரூபாவாக காணப்பட்ட கரட் ஒரு கிலோகிராமின் விலை தற்போது 800 ரூபா வரை குறைந்துள்ளது.

அத்துடன் கோவா, வெண்டிக்காய், பீட்ரூட், போஞ்சி என்பவற்றின் விலையும் வெகுவாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கொழும்பு, ஜன. 23

2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நாளை முதல் அடுத்த மாதம் 15 திகதி வரை நிகழ்நிலை முறைமை ஊடாக மாத்திரம் ஏற்றுக் கொள்ளபடும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, சகல பாடசாலை விண்ணப்பதாரிகள் பாடசாலை அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறைமையிலும் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை முறைமை மூலம் விண்ணப்பங்களை சமர்பிக்குமாறு அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் முதல், கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்காக விண்ணப்பிக்கவுள்ள சகல தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமும் தேசிய அடையாள அட்டை இருப்பது கட்டாயமானதாகும்.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகப் பூர்வ இணைத்தளமான www.doenets.lk என்ற இணைத்தளம் ஊடாக விண்ணப்பங்களை பிழையின்றி சமரப்பிக்குமாறு பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை விண்ணப்பங்கள் தொடர்பில் ஏதேனும் விசாரணைகள் இருப்பின் 011 27 84 208 என்ற தொடர்பு இலக்கத்திற்கோ அல்லது 011 27 84 537 இலக்கதிற்கோ அழைக்க முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், gceolexams@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பினை ஏற்படுத்தி விண்ணப்பங்கள் தொடர்பான விளக்கங்களை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் இராமர் கோவில் குட முழுக்கை முன்னிட்டு வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவிலிலும் சிறப்பு பூசை

வடமராட்சி, ஜன. 22

இந்தியாவின் அயோத்தியில் இராமர் கோவிலின் நேற்று குட முழுக்கு இடம் பெறும் நிலையில் யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபர ஆழ்வார் ஆலயத்திலும் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம் பெற்றன.

சுதர்சன ஈஸ்வரக் குருக்கள் கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியர்கள் இணைந்து காலை பத்து மணியளவில் ஸ்னபனம் அபிசேகம் நடத்தப்பெற்று பின்னர் இராமருக்கான விசேட அபிடேக பூசைகள் இடம் பெற்றன.



இதில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகள், வல்லிபுர ஆழ்வார் பக்தர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன் சிறி இராம பஜனைகளும் இடம் பெற்றன. (அ-2)

# மக்களின் வரிப்பணத்தில் நாட்டின் தலைவர் சவாரி

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 23

மக்கள் படும் இன்னல்களை எண்ணாமல் மக்களின் வரிப் பணத்தில் நாட்டின் தலைவர் சவாரி செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாரம்மல நகரில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டின் ஜனாதிபதியாக 17 மாதங்களில் 18 வெளிநாட்டு விஜயங்களை மேற் கொண்டுள்ளார்.

மக்களை பலிகடாக்கி மக்கள் படும் துன்பங்களையும், வலிகளையும் கருத்தில் கொள்ளாமல், வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை போதாமையினால் மேலும் 200 மில்லியன் ஒதுக்கிக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க - ராஜபக்ச நட்பு வட்டார முதலாளித்துவத்தை கடைப் பிடித்து வருகிறார்.மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப் பணம் ஊழல் மற்றும் மோசடி மூலம் திருடப்படுகின்றது.

இந்த பொருளாதார பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை காப்பாற்ற ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும். இதன் மூலம் நாட்டின் வங்குரோத்து நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் நீதி நிலைநாட்டப்படும்.

தற்போதைய அரசாங்கம் முட்டாள்தனமான கொள்கைகளால் நாட்டை அழித்து வருகிறது. நட்பு வட்டார முதலாளித்துவத்தை பின்பற்றும் இந்த அரசாங்கம் மக்கள் சக்தியினால் விரட்டியடிக்கப்படும்" என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ)

# புதிய காற்று சுழற்சியால் எதிர்வரும் வாரத்தில் மழைக்கான சாத்தியம்!

கொழும்பு, ஜன. 23

எதிர்வரும் சில நாட்களுக்கு நாட்டில் பெரும்பாலும் சீரான காலநிலையே தொடரும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்த வாரம் உருவாகும் காற்று சுழற்சி காரணமாக எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மட்டக்களப்பு, பொத்துவில், திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் எதிர்வரும் 28ஆம் திகதியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் ஓரளவு மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

இன்றுள்ள வானிலை அமைப்பின்படி இந்த முன்னறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் மழைக்கான சாத்திய கூறுகள் குறைவாகவே உள்ளன.

ஏற்கனவே, குறிப்பிட்டது போல் பொங்கல் தினத்தன்று பெலால் என்னும் சூறாவளி மொறிசியஸ் தீவுகளை தாக்கியது.

அதுமட்டுமல்லாது அடுத்த வாரமளவில் குறிப்பாக 24ஆம், 25ஆம் திகதி அளவில் மீண்டும் ஒரு சூறாவளி மொறிசியஸ் தீவு மற்றும் அதனை அண்டிய சில தீவுகளை தாக்கும் சந்தர்ப்பம் உள்ளது. (அ)

# இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி: விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு

கொழும்பு, ஜன. 23

தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்கு சட்ட ஆலோசனைகளை பெறுவதற்காக குறித்த அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்கால நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பின்பற்றவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தரமற்ற இம்யுனோகுளோபுலின் மருந்து இறக்குமதி தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் மீள வாக்குமூலம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் உட்பட பல அதிகாரிகளின் ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட பலர் இந்த தரமற்ற இம்யுனோகுளோபுலின் தடுப்பூசி மருந்து விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# குற்றச் செயல்களில் ஈடுபடுவோருடன் தொடர்பைப் பேணிய சிப்பாய் கைது!

கொழும்பு, ஜன. 23

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுடன் தொடர்பை பேணிய இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஹதுடுவ - உஸ்வத்த பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது அவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து போதைப்பொருட்கள், இராணுவ சீருடைகள் மற்றும் அவருடைய பதவிக்குரித்தான சில இலட்சினைகளை காவல்துறை விடேச அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சந்தேகநபர், கடந்த வருடம் ஜூன் மாதம் 21 ஆம் திகதி கொஸ்கொட பகுதியில் விஜித்த மகேந்திரன் என்ற ரண்மல்லி என்பவரை கொலைச் செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் இன்று விவாதம்!

கொழும்பு, ஜன. 23

உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் (இணையப் பாதுகாப்புச் சட்டமூலம்) இன்றும் நாளையும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு உட்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த புதிய சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொழில்முறை ஊடகவியலாளர்களின் ஒன்றியம் மற்றும் சுதந்திர பத்திரிகை இயக்கம் ஆகியன கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

மக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி ஜனநாயக உரிமைகளை நசுக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளை கூட்டாக தோற்கடிக்க வேண்டும் என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தல்களில் வெற்றியீட்டுவதற்கான இலக்குகளை எட்டுவதற்காகவே அரசாங்கம் ஒடுக்குமுறைச் சட்டமூலங்களை நிறைவேற்ற முற்படுவதாக தொழில்முறை ஊடகவியலாளர்களின் ஒன்றியத்தின் தலைவர் துமிந்த சம்பத் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இந்த சட்டமூலத்திற்கு சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளர் ஹனா இப்ராஹிமும் தமது எதிர்ப்பினை அறிக்கை ஊடாக வெளியிட்டுள்ளார்.

இதேவேளை உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம் இன்றும் நாளையும் யும்பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு உட்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் பரிசீலிக்கப்படும் போது, அதில் பல திருத்தங்கள் உள்ளடக்கப்படும் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அண்மையில் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா விவசாயிகளிடம் நெல் கொள்வனவில் மோசடி!

வவுனியா, ஜன. 23

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்ய வரும் வெளி மாவட்ட நெல் கொள்வனவாளர்கள் மற்றும் உள்ளூர் நெல் கொள்வனவாளர்கள் நிறுவை தராசுகளில் பாரிய மோசடி மேற்கொண்டு விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்து வருவதாக வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் சி. விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

தற்போது அறுவடை ஆரம்பித்து உள்ள நிலையில் விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்யவரும் கொள்வனவாளர்கள் நிறுவை தராசுகளில் மோசடி செய்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்கின்றனர்.

தராசில் இருக்கும் மேல் பகுதியை மாற்றி வைப்பதன் ஊடாக இரண்டு மூடைகளில் சுமார் 15 கிலோ வீதம் விவசாயிகள் நட்டமடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சுட்டிக் காட்டிய அவர்,

நியாயமாக கொள்வனவு செய்பவர்களை விட 100, 200 ரூபா பணம் அதிகமாக கிடைக்கின்றது என்ற காரணத்தினால் விவசாயிகள் அவ்வாறான கொள்வனவாளர்களிடம் நெல்லை கொடுத்து பல ஆயிரம் ரூபா நட்டம் அடைந்து ஏமாற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# காங்கேசன்துறை பொலிஸ் விடுதிக்கு குடிதண்ணீர்!

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை பகுதியில் உள்ள பொலிஸ் விடுதியில் குடிநீர் சுத்திகரிப்பு தொகுதி அமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ் திணைக்களத்தின் 20 இலட்சம் நிதிப் பங்களிப்பில் வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் அருண தென்னக்கோனின் தலைமையிலான கடற்படையினரின் தொழில்நுட்ப மற்றும் சரீர ஒத்துழைப்புடன் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரத்ன, வட மாகாண கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் அருண தென்னக்கோன், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கடற்படையினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



இதேவேளை நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த குடிநீர் பிரச்சினைக்கு இதன் மூலம் கிடைத்துள்ளதுடன், வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் அருண தென்னக்கோன் நேற்றுடன் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வேலையின்மை விகிதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 23

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் வேலையின்மை விகிதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் வேலையின்மை விகிதம் 5.2 வீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் காலாண்டில், இலங்கையில் வேலையின்மை விகிதம் 4.7 வீதமாக காணப்படட் நிலையில் இரண்டாவது காலாண்டில், 5.2 வீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் மாத்திரம் 15-24 வயதுடைய இளைஞர்களில் 25.8 சதவீதமானோர் வேலையை இழந்துள்ளதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

# கல்வி நடவடிக்கைகளை சுமுக நிலைக்கு கொண்டு வர பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைக்கவேண்டும்

## அரசாங்க அதிபரிடம் கோரிக்கை

அம்பாறை, ஜன. 23

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட பிரதேசங்களை வழமை நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம உள்ளிட்ட குழுவினர் அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம உள்ளிட்ட குழுவினருடன் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ், ஜனாதிபதி செயலக உயர் மட்ட அதிகாரி ஆர். நிசாந்தன், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் ஷாபிர், மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எச்.ஏ.அஹ்மத், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் மற்றும் உலக உணவுத்திட்டத்தின் உயர்மட்ட அதிகாரிகளான சந்த்ரதிலக்க வீரசிங்க, டப்ளியு.எஸ்.ஐ.பெனாண்டோ, ஜெ.ஹெட்டியாராச்சி, எம். நிஹ்மத் ஆகியோருடன் இன்னும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த குழுவினர் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மற்றும் பல்கலைக்கழக பொறியியலாளர் எம்.எஸ்.எம். பளில் ஆகியோருடன் விரிவான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதுடன் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர். இங்கு கருத்து தெரிவித்த உபவேந்தர் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை சுமூக நிலைக்கு கொண்டு வர பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அவசரமாக புனரமைக்கப்பட வேண்டும் என்றும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்களில் இருந்து பல்கலைக்கழகத்தை பாதுகாக்க



விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தனது கருத்தில் தங்களது மாவட்ட செயலக மட்டத்தில் முடியுமான அனைத்து உதவிகளையும் செய்வதாகவும் உறுதியளித்தார். (அ)

# பிரபல ஐஸ் வியாபாரி உள்ளிட்ட மூன்று பேர் போதைப்பொருடன் காத்தான்குடியில் கைது

மட்டக்களப்பு, ஜன. 23

காத்தான்குடி பிரதேசத்தில் ஐஸ் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பிரபல ஐஸ் வியாபாரி ஒருவரை ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்க தெரிவித்தார்.

புதிய காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள வாகனம் திருத்துமிடம் ஒன்றில் வைத்து குறித்த ஐஸ் வியாபாரி இரண்டு கிராம் 110 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிசாரிடம் சிக்கியுள்ளார்.

அதே நேரம் காத்தான்குடி அலியார் சந்தியில் வைத்து இரண்டு கிராம் 45 மில்லி கிராம் போதை பொருளுடன் 29 வயது நபர் ஒருவரும் உள்ள வீதியில் வைத்து 190 மில்லி கிராம் அபினுடன் 54 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

வாகனம் திருத்தும் இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள ஐஸ் வியாபாரியை தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் ஏனையவர்கள் மட்டக் களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(அ)

# மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள் விநியோகம்

மட்டக்களப்பு, ஜன. 23

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளரின் பணிப்பின் பேரில் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மிலின் ஆலோசனைக்கு அமைய சமூக பராமரிப்பு நிலைய உத்தியோகத்தர்களின் முயற்சியின் பயனாக எம். ஜே. எப் சரிடேபிள் அமைப்பினால் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரும் வாழைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், பாராளுமன்ற உறுப்பினரும் செய்யத் அலிசாஹிர் மௌலானா, உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. றமீஸா. பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம். றுவைத் சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.நஜீம் என பலரும் கலந்துகொண்டு இவ்வுபகரணங்களை பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விருது வழங்கல் விழாவும் பரிசளிப்பும்!



அம்பாறை, ஜன. 23

ஏ.ஆர்.எம். முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருட இறுதி பரிசளிப்பு விழாவும், ஆசிரியர்களை கௌரவித்து விருது வழங்கி வைக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் முன்பள்ளி பாலர் பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்து கொண்டு சிறப்பித்தர்.

மேலும், சாய்ந்தமருது பிரதேச கோட்ட கல்வி அதிகாரி என்.எம்.ஏ.மலீக் கௌரவ அதிதியாகவும், விசேட அதிதிகளாக முன்னாள் மல்ஹருஸ்சம்ஸ் வித்தியாலய அதிபர் திருமதி நிப்கா அன்சார், கல்முனை வலயக் கல்வி அலுவலக பாலர் பாடசாலை கல்வி இணைப்பாளர் அஸ்ஷேக் ஐ.எல்.எம். அனீஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி வை. திருப்பதி, என்.எம்.எஸ்.சிரின், ஏ.எம்.ஆயிசா, திருமதி சங்கீதா சுதர்சன் உள்ளிட்ட பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது, பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்த கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிபினால், முன்பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் பதக்கம் அணிவித்து, சான்றிதழ் மற்றும் பரிசில்களையும் வழங்கி வைத்தார். (அ)

# மண்முனைப்பற்றில் பொங்கல் விழா

மட்டக்களப்பு, ஜன. 23

உழவர் திருநாளாம் தைத் திருநாளை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரி தினேஷ் தலைமையில் மாவிலங்கன்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மண்முனை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வளாகத்தில் வயல் அறுவடை பாரம்பரிய நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கிளை ரீதியாக பல வகையான பொங்கல் பானைகளால் நிகழ்வை அலங்கரித்தமை ஒரு சிறப்பம்சமாகும்.

இதன்போது ஆன்மீக மாவிலங்கன்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மண்முனை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பிரதம குரு மகேந்திர ராசா ரஜீவன் அவர்களின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன்போது உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. லோகினி விவேகானந்தராஜ்,




பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மனோரஞ்சனி ஜெயச்சந்திரன், கணக்காளர் வல்லிபுரம் நாகேஸ்வரன், நிருவாக உத்தியோகத்தர் சின்னத்துரை திவாகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ந்து மாவிலங்கன்துறை ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகள், உடுக்கு இசை, பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உழவர் பாடல், கிராமிய பாடல், என பல கலை நிகழ்வுகளும் பொங்கல் விழாவை சிறப்பித்ததிருந்தன.

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து மாவிலங்கன்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மண்முனை பகுதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம், முதியோர் சங்கம், மீனவர் சங்கம், ஹெயார் நுன்நிதிச் சங்கம் என பல அமைப்புக்கள் இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் நிபந்தனைகளை நிராகரித்தார் நெதன்யாகு

## பணயக்கைதிகளை விடுவிக்கும் சாத்தியமில்லை



ஜெருசலேம், ஜன. 23

இஸ்ரேலுக்கு எதிரான போரை நிறுத்த ஹமாஸ் போராளிகள் அமைப்பு விதித்துள்ள நிபந்தனைகளை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு நிராகரித்துள்ளார்.

போரை நிறுத்தவும் பணயக் கைதிகளை விடுவிக்கவும் ஹமாஸ் நிபந்தனைகளை விதித்திருந்தது.

காஸா நிலப்பரப்பில் இருந்து இஸ்ரேலியப் படையினர் முற்றாக வெளியேற வேண்டும் எனவும் காஸாவின் தமது அமைப்பே அதிகாரத்தில் இருக்க வேண்டும் எனவும் ஹமாஸ் அமைப்பு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், காஸாவின் தென்பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகர் மீது இஸ்ரேலியப் போர் விமானங்கள் தொடர்ந்து குண்டு தாக்குதல் நடத்தியதாக ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றிடம் கூறியுள்ளார்.


குஇஸ்ரேல் தொடர்ந்தும் நடத்தி வருவதன் காரணமாகவும் ஹமாஸ் விதித்த நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாலும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான சாத்தியம் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலைமையில், ஹமாஸ் அமைப்பின் நிபந்தனைகளை ஏற்றால், போரில் இதுவரை கொல்லப்பட்டுள்ள இஸ்ரேலிய படையினரின் மரணத்துக்கு அர்த்தமில்லாமல் போய்விடும் என இஸ்ரேல் பிரதமர் கூறியுள்ளார்.

அத்துடன் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேல் மக்கள் மீது ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலை போன்ற மற்றுமொரு தாக்குதல் ஏன் மேற்கொள்ளப்படாது என்ற கேள்வியும் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், ஹமாஸ் அமைப்பை முற்றாக அழித்து, பணயக்கைதிகளை மீட்பதே தமது இலக்கு எனவும் நெத்தன்யாஹூ குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பணயக்கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் பிரதமர் உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பணயமாக பிடித்துச் செல்லப்பட்டுள்ளவர்களின் குடும்பங்கள் கடும் அழுத்தங்களை கொடுத்து வருகின்றன.



# ரஷ்ய ஜனாதிபதி புடினின் சொத்து விவரம் வெளியீடு!

மொஸ்கோ, ஜன. 23

2012 ஆம் ஆண்டு முதல் ரஷ்ய ஜனாதிபதியாக பதவி வகித்து வருபவர் விளாடிமிர் புடின்.

இவரது ஆண்டு வருமானம் 1.4 லட்சம் டொலர் என்றும் 800 சதுர அடியில் வீடு, 3 மகிழுந்துகள் மட்டுமே தன்னிடம் இருப்பதாகவும் முன்னதாக அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் புடினின் உண்மையான சொத்து மதிப்பு குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

விளாடிமிர் புடினின் சொத்து மதிப்பு குறித்து வெளியான தகவலின் அடிப்படையில், அவரது மொத்த சொத்து மதிப்பு 200 பில்லியன் டொலர் என குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், கருங்கடலை ஒட்டி அவருக்கு 1.9 லட்சம் சதுர அடியில் மிகப் பெரிய மாளிகை உள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் குறித்த மாளிகையை பராமரிப்பதற்கு மாத்திரம் 2 மில்லியன் டொலர் செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர 19 சொகுசு வீடுகள், 700 மகிழுந்துகள், 58 விமானங்கள் மற்றும் 6 லட்சம் டொலர் மதிப்பிலான கைக்கடிகாரங்கள் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன், தி ப்ளெயிங் என்ற விமானத்தில் தங்கத்தில் ஆன கழிவறை அமைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)



# டப்ளின் விமான நிலையத்தின் 102 விமான சேவைகள் இரத்து

டப்ளின், ஜன. 23

இஷா சூறாவளியை அடுத்து அயர்லாந்தின் டப்ளின் விமான நிலையத்தின் 100 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சூறாவளி காரணமாக 27 விமானங்கள் ஏனைய விமான நிலையங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அயர்லாந்தின் பல பகுதிகளுக்கு செம்மஞ்சள் வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள அதேநேரம் மேல் மற்றும் வடமேற்கு பகுதிகளுக்கு கடுமையான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் இஷா சூறாவளி நெதர்லாந்தை அடையும் போது பலத்த காற்று வீசக் கூடும் என்பதால், அம்ஸ்ரடாம் விமான நிலையத்தில் 130 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. (அ)

# சீனாவில் பெரும் மண்சரிவு!

## 47 பேரைக் காணவில்லை

பீஜிங், ஜன. 23

சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள லியாங் சுய் கிராமத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 47 பேர் காணாமல் போயுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று அதிகாலை இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் தென்மேற்கு யுனான் மாகாணத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேர் காணாமல் போயுள்ள நிலையில் மீட்பு பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

மேலும், நேற்று அதிகாலை ஏற்பட்ட மண் சரிவு, அந்த பகுதியில் காணப்படும் சிசிடிவியில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 5.51 மணியளவில் நிலச்சரிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மண்சரிவில் சுமார் 18 வீடுகள் புதையுண்டுள்ளதாகவும், 200க்கும் மேற்பட்டோர் அப்பகுதியில் இருந்து அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் இந்த அனர்த்ததில் உயிரிழந்தவர்கள் தொடர்பாக இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களாக சீனாவில் இயற்கை பேரழிவு சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகி



வருகின்றன. கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ஏற்பட்ட மண்சரிவில் 7 பேர் உயிரிழந்ததாக ஊடக அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஒகஸ்ட் மாதம் சியான் நகரின் வடக்குப் பகுதியில் கனமழை காரணமாக 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு நோக்கி நகரும் மிகப்பெரிய பனிப்பாறை!

லண்டன், ஜன. 23

1986ஆம் ஆண்டு அண்டார்டிக் கடற்கரையில் இருந்து ஒரு பெரிய பனிப் பாறை பிரிந்தது.

அது விரைவாக வெட்டல் கடலில் தரைதட்டி, ஒரு பனித் தீவாக மாறியது.

உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான குறித்த பனிப்பாறை ஏ23ஏ என்று அழைக்கப்படுகிறது.

கிட்டத்தட்ட 4,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட குறித்த பனிப்பாறை, ஒருங்கிணைந்த லண்டன் நகரத்தைவிட இரண்டு மடங்கு பெரியது என குறிப்பிடப்படுகின்றது.

இது அண்டார்டிகாவின் பில்ச்னர் பனிப்பரப்பில் இருந்து பிரிந்த பனிப்பாறைகளின் ஒரு பகுதியாகும்.

இந்த பனிப்பாறை கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் வேகமாக நகரத் தொடங்கியது.

இந்த நிலையில் குறித்த பனிப்பாறை வடக்கு நோக்கி செல்வதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த பனிப் பாறை ஒரு டிரில்லியன் டன் தண்ணீரைக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# எதிர்வரும் தேர்தல் நாட்டை காப்பதற்கான இறுதி வாய்ப்பு

## மிகிந்தலை மகாநாயக்க தேரர்

கொழும்பு, ஜன. 23

**அடுத்துவரும் தேர்தல் நாட்டை பாதுகாத்துக்கொள்ள கிடைத்த இறுதி சந்தர்ப்பமாகும். அதனால் அரசியல் வாதிகளிடம் தொடர்ந்து ஏமாறாமல் உண்மையாக சேவை செய்யக்கூடிய சிலரை தெரிவு செய்து நாட்டை கட்டி யெழுப்ப தயாராக வேண்டும்.**

அத்துடன் இந்த நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசியல் கட்சிகளும் விடுதலைப்பு லிகளுக்கு சமமானவைகளாகும் என மிகிந்தலை மகாநாயக்க தேரர் வளவா ஹெங்குணவெவே தம்மரத்ன தெரிவித்தார்.

நாட்டின் எதிர்கால நிலைமை தொடர்பாக கருத்து தெரிவிக் கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடு கையில்,

நாட்டை ஆட்சி செய்யப் போகிறவர் யார் என்பது எமக்கு முக்கியம் இல்லை. அதேபோன்று எந்த கட்சி ஆட்சி செய்யப்போகிறது என்பதும் எமக்கு தேவையில்லை. எமது நாடே எமக்கு முக்கியம். அதனால் தற்போது எங்களுக்கு கதைத்துக்கொண்டிருக்க நேரம் இல்லை. இதேபோன்று போராட்டம் செய்யவோ ஹர்த்தால் மேற்கொள்ளவோ எமக்கு தேவையில்லை.

தற்போது எமக்கு தேவையாக இருப்பது, சிறந்த சிந்தனையும் இலக்கும் உள்ள இளைஞர்களாகும். நூற்றுக்கு ஆயிரம் இன்று ஆட்சியாளர்கள் மக்கள் பக்கம் இல்லை. அதனால்தான் ஆட்சியாளர்கள் கிராமங்களுக்கு செல்லும் போது அந்த பிரதேச மக்கள் அவர்களை விரட்டுகின்றார்கள். அதனால் எமது நாட்டை எமக்கு கட்டியெழுப்ப முடியும். அதற்காக உண்மையான, வேலை செய்ய முடியுமான இளைஞர்கள் எமக்கு தேவை. அவர்கள் முன்வரவேண்டும்.

எதிர்வரும் தேர்தல் எமக்கு இறுதி சந்தர்ப்பமாகும். இதனை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாவிட்டால் எமக்கு இனிஒருபோதும் சந்தர்ப்பம் கிடைக்காது. அத்துடன், 75 வருடங்களாக அரசியல்வாதிகள் எங்களிடம் வேலை வாங்கினார்கள். அதனால் தற்போது நாங்கள் எங்களுக்கு தேவையான ஒருவரை தெரிவுசெய்து கொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள் இந்த ஆட்சியின் சுவையை அறிந்தவர்கள். அதனால் அவர்கள் பொய் வாக்குறுதிகளை வழங்கி எப்படியாவது ஆட்சிக்கு வரவே முயற்சிப்பார்கள். அதற்கு மக்கள் ஏமாந்து விடக் கூடாது. இந்த அரசியல் கட்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு சமமானவர்கள். ஏனெனில் இவர்கள் அனைவரும் இந்த நாட்டை அழித்தவர்கள்.

அதனால் நாட்டு மக்கள் அனைவரும் இந்த அரசியல் வாதிகளுக்கு ஏமாந்ததுபோதும் இனியும் ஏமாறக்கூடாது. அதனால் சிறந்த இளைஞர்கள் குழுவை இணைத்துக்கொண்டு நாட்டை பாதுகாக்கும் நடவடிக்கையை நாங்கள் மேற் கொள்ளவேண்டும். அதனை எங்களால் செய்ய முடியும் - என்றார். (ஐ)



# மன்னார் அமைப்புகளுக்கான தளபாடங்கள் வழங்கி வைப்பு

மன்னார், ஜன. 23

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக் கீட்டின் மூலம் மன்னார், மாந்தை பிரதேச செயலகத்திற் குட்பட்ட கிராம அமைப்புக் களுக்கான தளபாடங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாந்தை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மாந்தை பிரதேச செயலகத் தின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டதுடன், 08 சமூக சேவைகள் அமைப்புக்களுக்கான உப கரணங்களையும் கையளித்தார்.

இந்நிகழ்வில், மாந்தை பிர தேச செயலகத்தின் செயலாளர், உதவிச் செயலாளர், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாஹிர், மாந்தை பிரதேச சபையின் முன்னாள் உதவித்தவிசாளர் தௌபீக், முன்னாள் உறுப்பினர்களான பிரசித்தா, நைஸர், விஜய பாண்டி, பெருமால், ராசையா மற்றும் இணைப்பாளர் முனவ்வர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# மதுபோதையில் வந்த மச்சானை தாக்கி கொலை செய்தவர் கைது!

கொழும்பு, ஜன. 23

மதுபோதையில் வந்து வன்முறையில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் தனது மச்சானை கோடரியால் தாக்கி கொலை செய்த நபர் தெஹியோவிட்ட பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

தெஹியோவிட்ட பகுதியை சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொல்லப்பட் டுள்ளார், 43 வயதான அவரின் மச்சான் கைது செய்யப்பட் டுள்ளார்.

உயிரிழந்த நபர் மது போதையில் வீட்டிற்கு வந்து, அவரின் சாகோதரியை தாக்கியுள்ளார். இதனை அவதானித்த அவரது கணவர் மனைவியின் சகோதரனை கோடரி மற்றும் கல்லால் பலமாக தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கானவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குடு சலிந்துவிடம் 79 சொகுசு வாகனங்கள் 48 வங்கிக் கணக்குகளில் பணப் புழக்கம்!

கொழும்பு, ஜன. 23

நிழல் உலக தாதாவும், போதைப்பொருள் கடத்தல் காரருமான 'குடு சலிந்து' 79 சொகுசு வாகனங்களை வைத் துள்ளதாகவும் , அவற்றின் இலக்கத் தகடுகள் மாற்றப்பட்டு போதைப்பொருள் வியாபாரத் துக்காக பயன்படுத்தப்பட்டுள் ளன என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ள னர்.

26 வயதான குடு சலிந்து, வெவ்வேறு நபர்களின் பெயர் களில் 48 வங்கிக் கணக்குக ளைப் பராமரித்து வந்துள்ள தாகவும், மேற்படி வங்கிக் கணக்குகள் ஊடாக 2 வருடங் களுக்குள் 1,059 மில்லியன் ரூபா பணம் புழக்கத்தில் விடப் பட்டுள்ளது எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித் துள்ளார்.

இலங்கையில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடு படும் நபர்களின் பெயர் பட்டியல் புலனாய்வுப் பிரிவின ராலும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினராலும் தயா ரிக்கப்பட்டு அந்தந்த பகுதி களின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், நாட்டை விட்டு தப்பிச் சென்ற குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வேலைத் திட்டமும் உள்ளது எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

குடு சலிந்து தற்போது சிஐடி தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகின்றது.

# கலாசூரி சிவகுருநாதனின் நூல் கன்பராவில் வெளியிடப்பட்டது!

கன்பரா, ஜன. 23

'இலங்கை இதழியலில் சிவ குருநாதன்' எனும் நூல் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முக மாக அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில்

வெளியிடப்பட்டது. கலா சூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊட கத்துறையிலும்

தனக்கெனப் பல முத்திரைக ளைப் பதித்துக் கொண்டவர். அவரை கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலிய தலைநகர் கன் பராவில் சிறப்புற இவ்விழா நடைபெற்றது.

கலாசூரி இ.சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூ லான "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அவுஸ்தி ரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெற்றது.

இலக்கிய ஆர்வலர், எழுத் தாளருமான க. திருவருள் வள் ளல் தலைமையில் கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

நூல் வெளியீட்டு விழாவில் மூத்த எழுத்தாளர் லெ.முருக பூபதி நூலை அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார். அதன் பின் நிமலன் கார்த்திகேயன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனை பற்றிய சிறப்புரை நிகழ்த்தினார்.

அத்துடன் சிறப்பு அதிதி யாக இலங்கை அரசின் உயர் ஸ்தானிகர் திருமதி. சித்ராங்கனி வாகிஷ்வரா அவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி சிறப்புரையை எழுத்தாளரும, இலக்கிய ஆர்வ லருமான திரு. சுந்தரதாஸ் ஆற்றினார். அதன்பின்

"இலங்கை இதழியலில் சிவ குருநாதன்" எனும் நூலின் தொகுப்பாசிரியர் திரு.ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கினார். அத்துடன் இளம் மாணவனான அரஜுன் விஷ்ணு 'தனது வாழ் வியல் வழிகாட்டி' எனும் பொருளில் தினகரன் பத்திரிகை யின் முன்னாள் பிரதம ஆசிரி யரை நினைவு கூர்ந்தார்.

இந்த நிகழ்வுகளை ஒழுங்க மைத்து, தொகுத்து வழங்கும் சின்னத்துரை மயூரன் அவர்க ளின் நன்றியுரையுடன் இறுதி யாக விழா நிறைவு பெற்றது.

தமிழ் மக்களின் அபிமானத் தைப் பெற்ற முன்னாள் தின கரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவ குருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊட கத்துறையி லும் தனக்கெனப் பல முத்திரை களைப் பதித்துக் கொண்டவர். அவரை கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலிய தலைநகர் கன் பராவில் சிறப்புற இவ்விழா நடைபெற்றது. (அ)






## இனப்பிரச்னை...

கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை,

ஒற்றையாட்சிக்குள் - 13ஆம் திருத் தத்துக்குள் எமக்கான தீர்வை முடக்கப் பார்க்கிறார்கள். நாம் உயர்ந்த பட்ச கோரிக்கைகளை முன்வைக்கும்போது அரசாங்கம் குறைந்த தீர்வையே முன் வைக்கிறது. விடுதலைப் புலிகள் தனி நாட்டை கோரிய போது சமஷ்டி தீர்வு குறித்து பேசினார்கள். சமஷ்டியை கேட்டபோது 13 என்றார்கள். இப் போது 13ஐ கேட்கின்றபோது 13 மைனஸ் என்றே கூறுகிறார்கள். எனவே, நாம் உயர்ந்தபட்ச கோரிக்கைகளையே முன்வைக்க வேண்டும். தீர்வு குறித்து பேசுவதானால் ஏனைய எமது நண்பர்க ளையும் (தமிழ் கட்சிகளையும்) அழைக்க வேண்டும்.

பருத்தித்துறை இறங்குதுறையை புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தை இலங்கை அரசுடன் இந்தியா செய்துள் ளது. மயிலிட்டி துறைமுகம் இவ்வாறு தான் புனரமைக்கப்பட்டது. ஆனால், மயிலிட்டி துறைமுகத்தின் அபிவிருத்தி யால் ஏற்பட்ட நன்மைகளை எமது மக் கள் - தமிழ் மக்கள் அனுபவிக்கவில்லை. சிங்களவர்களே அனுபவிக்கிறார்கள்.

இந்த நிலையில், இந்திய அபிவிருத்தி யின் பெயரால் இன்று 7 ஆயிரம் குடும் பங்கள் திருகோணமலையில் இருந்து அகற்றப்படும் நிலைமை உருவாகியுள் ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஜெய் சிறீ...

மடாதிபதிகள் என ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

இராமர் பிறந்த பூமி என்று அழைக் கப்பட்ட இடத்தில் முன்னர் பாபர் மசூதி இருந்தது. இந்த மசூதி 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இராமர் கோயிலை அழித்தே இந்த பள்ளிவாசல் அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. 'கர சேவகர்கள்' என்று அழைக்கப்பட்ட வர்கள் 1992ஆம் ஆண்டு பாபர் பள்ளி வாசலை இடித்தழித்தனர். இந்திய உச்ச நீதிமன்றம் 2019ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பின் மூலமாக இராமர் கோயில் அமைக்கும் பணி தொடங்கியது.

மூன்று மாடிக் கட்டடமாக கறுப்பு மற்றும் சிவப்பு கிரனைட் கல்லில் இந்த இராமர் கோயில் அமைக்கப்பட்டது. இந்தக் கோயில் 21. 7 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 6 ஆயி ரத்து 943 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிதி நன்கொடை மூலமாக திரட்டப்பட் டது.

அயோத்தி நகரத்தில் நேற்றுக் காலை முதல் அனைத்து வீதிகளும் கோயிலுக் காக மட்டும் பயன்படுத்தப்படும் வகை யில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாது காப்பை உறுதிப்படுத்தி ஆயிரக்கணக் கான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த னர். பி. ஜே. பியின் காவி நிறக்கொடிகள் எங்கும் பறக்கவிடப்பட்டிருந்தன. இந்து கடவுளர்களின் - அதிலும் குறிப்பாக இராம பிரானின் படங்கள் வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டு - அலங்கரிக்கப் பட்டிருந்தன.

இதேநேரம், கோவில் திருப்பணி முழுமையாக நிறைவுபெறாத நிலையில் இந்த சடங்குகளை செய்வது இந்து மதத் துக்கு எதிரானது என்று எதிர்க்கட்சிகள் சாடின. அத்துடன், எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்கள் கும்பாபிஷேக நிகழ்வில் பங்கேற்கவும் மறுப்புத் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, அயோத்தியை சிறந்த யாத்ரீக தளமாக மாற்ற இந்திய அரசு 385 கோடி டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் ஒரு இலட்சத்து 23 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இந்த ஆலயத்தை நாளை முதல் மக்கள் தரிச னம் செய்ய முடியும். தினமும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் ஆலயத்தை தரிசிக்க வருவர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## யுக்திய...

அணுகுமுறைகள் குறித்து ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். அதிகாரிகள் உடனடியாக இந்த நடவடிக்கையை இடைநிறுத்தவேண்டும் மீளாய்வு செய்ய வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுகாதாரம் மற்றும் மனித உரிமை களை அடிப்படையாக கொண்ட கொள்கைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். புறக்கணிக்கப்பட்ட சமூக, பொருளாதார குழுக்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான போதைப்பொருள் குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட மையை கடுமையாக கண்டித்துள்ள ஐ. நாவின் மனித உரிமை நிபுணர்கள் கட் டாய இராணுவ புனர்வாழ்வு முகாம் களில் நூற்றுக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையும் கண்டித்துள் ளனர்.

'யுக்திய' எனப்படும் நடவடிக்கை யின் போது சித்ரவதை மற்றும் மனிதா பிமானமற்ற நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ)

## சகல...

அத்துடன், தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இந்தியப் பிரதமர் மோடி தொடர்ந்தும் ஆர்வமாக உள்ளார். இது விடயத்தில் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பார் என்றும் கூறியுள் ளார்.

நேற்று திங்கட்கிழமை இந்தியத் தூ துவர் சந்தோஷ் ஜா தமிழ் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் களை சந்தித்துப் பேசினார் இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன், கட்சி யின் தலைவர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசியக் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேம சந்திரன் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் களான எம். ஏ. சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், வினோ நோதராதலிங்கம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்பில் பங்கேற்றவர்கள், மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் இதன் மூலமே தமிழ் மக்களின் தாயகப் பரப்பில் மேற் கொள்ளப்படும் சிங்கள - பௌத்த மய மாக்கலை தடுத்து நிறுத்தமுடியும் என்று வலியுறுத்தினர்.

அத்துடன், மாகாண சபை தேர்தலை மிகவிரைவாக நடத்த வேண்டும். தேர் தலை நடத்த பணம் இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூறுகிறது. பொரு ளாதார நெருக்கடியின்போது இலங் கைக்கு உதவிய இந்தியா, தேர்தலை நடத்தவும் பணம் வழங்க வேண் டும்.

மேலும், பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்பட வேண்டும். மயிலிட்டி, பருத்தித்துறை இறங்குதுறைகளில் சிங்க ளவர்களின் படகுகளே நிறுத்தப்படு கின்றன. தமிழர்கள் புறமொதுக்கப்படு கிறார்கள். இது தொடர்பில் இந்தியா கரிசனை காண்பிக்க வேண்டும்.

திருகோணமலை நகரத்தை இந்தியா நிர்மாணிப்பதாகக் கூறப்பட்டு வரும் நிலையில், வேறு நாடுகளுடன் இணைந்து திருகோணமலை நகரத்தை நிர்மாணிக்க அரசு திட்டமிட்டு வருகிறது என்று கூறப்படுகின்றது. இங்கு தமிழ் மக்களை முற்றாக வெளியேற்றுவதாக அமைய லாம். இது விடயத்தில் இந்தியா கவனம் செலுத்த வேண்டும் என்றும் தமிழ் கட்சி களை சேர்ந்தவர்கள் வலியுறுத்தினர். (ஐ)

## இரா.சம்பந்தனிடம்...

இதன்போது, மக்கள் பிரதிநிதிகளின் - கட்சித் தொண்டர்களின் தெரிவு. புதிய தலைவரான உங்களுக்கு எனது உளப் பூர்வமான வாழ்த்துக்களும் நல்லாசிக ளும் எப்போதும் இருக்கும். எங்களு டைய மக்களுக்காக உங்களை முழுமை யாக அர்ப்பணித்துச் செயல்படுவீர்கள் என்று நம்புகின்றேன். கட்சியின் ஐக்கி யத்தை கட்டிக்காக்கும் பொறுப்பு உங்க ளுக்கு உள்ளது", என்று இரா. சம்பந்தன் கூறினார். (ஐ)

## அரசியல்வாதி...

இலக்கு வைத்தே வாகனமொன்றில் வந்தவர்கள் இந்த துப்பாக்கிச்சூட்டை நடத்தியிருந்தனர். இதில், நான்கு பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்றும் தெரிய வருகின்றது.

'அபே ஜனபலவேகய' (எங்கள் மக் கள் சக்தி) கட்சியின் தலைவரும் சம்பவத் தில் உயிரிழந்தார்.

டிபென்டர் ரக வாகனத்தில் வந்தவர் கள், காலை உணவை உண்பதற்காக, ஹோட்டல் ஒன்றுக்கு சென்றிருந்த வேளையிலேயே துப்பாக்கிச்சூடு நடத் தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் பாதாள குழுக்களுக்கு இடையிலான மோதலால் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படு கின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துவருகின்றனர். (அ)

## சுகாதார...

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு முழுவதும் தொழில்துறையினர் எதிர்கொண்டுள்ள பிரதான பிரச்னைகள் தொடர்பில் அவ தானம் செலுத்தப்பட்டது. குறிப்பாக தனிநபர் வருமான வரி அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள குழுவினர் அரசாங் கத்தால் அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக பேராசியர்கள் உள்ளிட்ட குழுவினர் அதிக வரி செலுத்த நேரிட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலவரம், மருத்துவர்கள் உள்ளிட்ட தரப்பினர் நாட்டை விட்டுச் செல்லும் நிலைமை தோற்றம் பெற்றுள் ளமை தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவுபடுத்தினர். அந்த கோரிக்கைக ளுக்கான தற்காலிக தீர்வாகவே பேராசிரியர்களுக்கும், மருத்துவர்களுக் கும் நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத் தது.

ஏனைய தரப்பினருக்கு எவ்வித பிரச்னைகளும் இல்லை என்று இதன் மூலம் நாம் கூற வரவில்லை. இது தொடர்பில் கடந்த இரு வாரங்களாக தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட தரப்பின ருடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட் டன. இவற்றின் போது பல கோரிக்கை களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன் நிதி அமைச்சுடன், அதாவது நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன உள்ளிட்டோருடன் நேரடியாக பேச்சை முன்னெடுத்துள் ளோம்.

இதற்கமைய எந்த காலப்பகுதியில் எவ்வாறான தீர்வுகளை வழங்க முடியும் என்ற பதிலை வழங்குவதற்கு அவர்க ளால் ஒரு மாதம் கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு மாத காலத்துக்குள் சாதகமான தீர்வை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கின் றோம் - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

இதன்போதே நீதி அமைச்சர் மேற்கண்ட வாறு கூறினார் என்று அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அத்துடன் இந்த நாட்டில் இனங்க ளுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டி யெழுப்புவதற்காக தேசிய ஐக்கியம் மற் றும் நல்லிணக்கத்துக்கான பணி மனை, காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆராயும் பணிமனை மற்றும் இழப் பீட்டு பணிமனை அமைக்கப்பட்டுள் ளன என்றும் உண் மையை கண்டறியும் ஆணைக்குழுவை விரைவாக அமைக்கப் படவுள்ளது என்றும் அமைச்சர் தூதுவ ரிடம் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் அரசியல் வாதிகள் மீது விரல் நீட்டப்படுகிறது. அரசியல்வாதிகளை நாட்டு மக்கள் நிராகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான அரசியலமைப்பு திருத்தம், தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் ஊழல் ஒழிப்பு சட்டம் போன்ற சட்ட திட்டங்கள் தற்போது அனுமதிக் கப்பட்டிருக்கின்றன.

இதன் ஊடாக ஊழல் மற்றும் சீர்கேடுகளற்ற இலங்கையை உருவாக் கும் அடிப்படை அடித்தளத்தை அமைத் திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கையில் நீதிமன்ற நடவடிக்கை மற்றும் ஜனநாயகம் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதற்கு தேவையான எந்த ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு தயார் என இதன்போது ஜேர்மன் தூதுவர் உறுதியளித்தார்.

அத்துடன் இலங்கையில் பொருளா தார அரசியல் நிலைமை மற்றும் மக்க ளின் வாழ்க்கை நிலை இயல்புநிலைக்கு வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்பதுடன் இலங்கை மற்றும் ஜேர்மன் நாடுகளுக்கிடையில் நீண்டகால தொடர்புகளை மேலும் அபிவிருத்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தூதுவர் மேலும் தெரி வித்திருந்தார். (ஐ)

## தமிழர்களின்...

தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க் கட்சிகளும் தம் கட்சிகளின் நலனை முன் னிறுத்தாமல் - மக்கள் நலனை முன்னி றுத்தி தமிழ் தேசியத்தின் பாதையில் ஓரணியாக தமிழ் தேசியக் கூட்டமைப் பாக ஒன்றிணையுமாறு அழைக்கின்றேன் - இவ்வாறு இலங்கை தமிழரசு கட்சி யின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் திருமலையில் வைத்து இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

அதில், அவர் மேலும் தெரிவித்தவை "தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது பெருவிருப் பம். அதனை முன்னிறுத்தியே தமிழரசு கட்சியின் தலைமைப்பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலை வராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன்.

இந்தநிலையில் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதல் பணியென எண்ணுகிறேன். தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணி செய்த சக தமிழ்த் தேசியக் கட்சிகள் சில பல கார ணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக் கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது. அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009இற்க்கு முன்னர் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் அசைக்கமுடி யாத சக்தியாக மிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்டவேண்டும் என்பதே தமிழ்மக்களின் பெருவிருப்பம். எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற் காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சி களையும் கடந்தகால கசப்பான நினைவு களைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன் - என்று கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் மீளாய்வு மார்ச்சில்

கொழும்பு, ஜன. 23

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மீளாய்வு எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் தவணையை விடுவிக்க முடியும் என இராஜாங்க அமைச்சர் கூறினார்.

வற் அறவிடப்படும் வர்த்தகர்களிடமிருந்து கட்டாயமாக அவர்களின் வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சிலர் அரசாங்கத்திற்கு வரி செலுத்தாது, அதிகரிக்கப்பட்டுள்ள வரியை தமது இலாபமாக வைத்துக்கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்: ஐக்கிய மக்கள் சக்தி மனு தாக்கல்

கொழும்பு, ஜன. 23

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார உயர்நீதிமன்றில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது பொது வாக்கெடுப்பு மூலம் குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றுமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(அ)

## மருந்து கொள்வனவில் வெளிப்படைத்தன்மை

### அமைச்சர் கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 23

நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதே இந்த ஆண்டின் முக்கிய எதிர்பார்ப்பாகும் என கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு மிகவும் தரமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. தொற்றா நோய்கள் தொடர்பில் இலங்கை பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. 20 வீதத்திற்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதுள்ள மருந்துப் பற்றாக்குறையை போக்குவதற்கு பெருமளவிலான அத்தியாவசிய மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருந்து தட்டுப்பாடு படிப்படியாக குறைந்து வருகிறது என்றே கூற வேண்டும். எதிர்காலத்தில், மருத்துவ விநியோகத் துறையையும், கொள்முதல் செயல்முறையையும் வெளிப்படையானதாக மாற்ற ஒன்லைன் முறையைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்காக ஏற்கனவே மொரட்டுவை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் கணினி துறைகளுடன் சுகாதார அமைச்சு கலந்துரையாடி வருகின்றது” -என்றார். (அ)

# தமிழ் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும்!

## கனேடியப் பிரதமர் உறுதி

ஒட்டாவா, ஜன. 23

**இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் சவால்களுக்கு உட்பட்டு வருவதாக கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**இதன்காரணமாகவே கனடா சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து தமிழர் நலன் தொடர்பில் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.**

கனடாவில் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழாவில் பங்கேற்ற அவர் இந்த கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்.

1983ஆம் ஆண்டு இலங்கையில் வன்முறைகள் ஆரம்பித்த காலத்தில் அப்போது ஆட்சியில் இருந்த லிபரல் கட்சி 1,800 இலங்கை தமிழர்களை கனடாவில் குடியேற்றியது.

இந்த தொகை கடந்த பல தசாப்தங்களில் அதிகரித்து இன்று புலம் பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடாக கனடா மாறியுள்ளது.

அத்துடன் கனடாவின் வளர்ச்சிக்கு தமிழர்களின் பங்களிப்பு வியக்கத்தக்கதாகும்.

இதன் காரணமாகவே 2016ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தை தமிழர் வரலாற்று மாதமாக கனேடிய அரசாங்கம் பிரகடனம் செய்தது எனவும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் இலங்கை தமிழர்களின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கனடா தொடர்ந்தும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் செயற்பட்டு வருகிறது.

அத்துடன், வேறு எந்த நாடும் நடைமுறைப்படுத்தாத வகையில் இலங்கை தமிழர்களின் மனித உரிமைகளுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கனடா தடைவிதித்துள்ளது எனவும் பிரதமர் ட்ருடோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் எனவும் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ உறுதியளித்துள்ளார். (அ)

# மட்டக்களப்பில் உண்ணாவிரதம்

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை மீளப்பெறுமாறு வலியுறுத்தல்

மட்டக்களப்பு, ஜன. 23

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் என்பவற்றை மீளப்பெறுமாறு வலியுறுத்தி மட்டக்களப்பில் மாபெரும் கவனயீர்ப்பு பேரணியொன்றும் உண்ணாவிரத போராட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டம் கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் “இலங்கை அரசாங்கம் அடக்குமுறை சட்ட வரைபுகளை மீளப்பெறவேண்டும்” என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் ஆரம்பமான பேரணி மட்டக்களப்பு காந்தி பூங்கா வரையில் தொடர்ந்து அங்குள்ள நினைவுத்தூபிக்கு அருகில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண சிவில் சமூகத்தின் பிரகடனம் ஒன்றும் வாசிக்கப்பட்டு அவை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கும் வழங்கிவைக்கப்பட்டது.




“நினைவுத்தூபிக்கு அருகே உண்ணாவிரத போராட்டம் நடத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை பொலிஸாரின் உத்தரவுக்கு அமைவாக அகற்றப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரிடம் அனுமதிபெற்ற பின்னரே மேடை அமைக்கப்பட்டது. இருப்பினும் எமக்கு வந்த தகவலுக்கமைய குறித்த மேடை அகற்றப்பட்டது.

இருப்பினும் உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்துள்ளோம்.

ஜனநாயக ரீதியான போராட்டத்தினை அடக்கமுனைகின்றனர். இதற்கு எவ்வகையிலும் எம்மால் ஆதரவு வழங்க முடியாது” என கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் பணிப்பாளர் புஹாரி மொகமட் தெரிவித்தார். (அ)

## சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்தும் தமிழ் அமைப்புகள்

### பிரிட்டனில் பாரிய எதிர்ப்பு பேரணி

லண்டன், ஜன. 23

பிரித்தானியாவிலுள்ள உள்ள இலங்கை தூதரகத்துக்கு முன்பாக எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை, அனைத்துலக தமிழ் இளையோர் அமைப்பு, அனைத்துலக இராஜதந்திரக் கட்டமைப்பு ஆகிய தமிழ் தேசிய அமைப்புக்கள் இணைந்து ஒழுங்கமைப்பு செய்துள்ளன.

தூதரகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்படும் இந்த எதிர்ப்பு பேரணி பிரித்தானிய பாராளுமன்றம் வரை செல்லவுள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கோரியே புலம்பெயர் தமிழ் மக்கள் இந்த பேரணியை ஏற்பாடு செய்துள்ளனர்.

பிரித்தானியப் பேரரசு இலங்கையை ஒன்றிணைத்த போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை புறக்கணிக்கப்பட்டதாக குற்றம் சுமத்துகின்றனர். இதனால் பல தசாப்தங்களாக இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகியுள்ளதாக தமிழ் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ)

## சிவனொளிபாதமலை யாத்திரை சென்ற அமெரிக்கத் தூதர் ஜூலி




கொழும்பு, ஜன. 23

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அண்மையில் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்றுள்ளார்.

பயணத்தின் சிறந்த பகுதி இலங்கையர்களுடனான அன்பான சந்திப்புகள், தொலைதூரத்திலிருந்து பயணிக்கும் இளைஞர்கள் முதல் குடும்பங்கள் வரை ஒருவருக்கொருவர் உதவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேநீர் அருந்தும் போது இடம்பெற்ற உரையாடல்களும், டாக இருக்குமாறு அவர்கள் வழங்கிய அறிவுரைகளும் இலங்கையர்கள் மீதான தனது மதிப்பை அதிகரித்துள்ளதாக அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் கணக்கின் குறிப்பில் தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# ஐ. பி. எல். ரி-20 தொடர் மார்ச் 22இல் ஆரம்பம்?

புதுடில்லி, ஜன. 23

ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறீமியர் லீக் இருபது - 20 தொடர் எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி ஆரம்பமாகி மே 26ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிய வருகின்றது.

இருப்பினும், இந்தியாவில் பொதுத் தேர்தல்களுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னரே வரவிருக்கும் தொடருக்கான அட்டவணை வெளியிடப்படும் என்று தெரிகிறது.

தேர்தல்கள் இருந்தாலும் ஐபிஎல் போட்டிகள் முழுவதும் இந்தியாவிலேயே நடைபெறும். இது தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் அதிகாரி கூறிய தகவலில், “நாங்கள் ஐ. பி. எல். அட்டவணை பற்றி விவாதித்தோம். பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு திகதிகள் குறித்து உள்துறை அமைச்சகம் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்திடமிருந்து தகவலுக்காகக் காத்திருப்பது தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. தேர்தல்கள் ஐ. பி. எல். நேரத்தில் வரக்கூடும். இந்திய மைதானங்களில் தான் நடைபெறும் இது பற்றி எந்த கேள்வியும் இல்லை. வேறு நாட்டுக்கு மாற்றுவது என்ற யோசனையும் இல்லை - என்றார். (ஐ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் சபலென்கா காலிறுதியில்



மெல்பர்ன், ஜன. 23

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸின் நடப்பு சம்பியனான அரினா சபலென்கா தற்போதைய தொடரிலும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆண்டின் முதல் “கிராண்ட்ஸ்லாம்“ போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் நடைபெற்று வருகிறது.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டி, வருகிற 28ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. தொடர் தற்போது விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான அரினா சபலென்கா (பெலாரஸ்) 6-3, 6-2 என்ற நேர் செற்றில் அனிசிமோவாவை (அமெரிக்கா) வெளியேற்றி காலிறுதியை உறுதி செய்தார். சபலென்கா காலிறுதியில் செக் நாட்டை சேர்ந்த பார்போரா கிரெஜிகோவா உடன் பலப்பரீட்சை நடத்த உள்ளார். சபலென்கா அவுஸ்திரேலிய ஓப்பனில் தொடர்ச்சியாக ருசித்த 11ஆவது வெற்றி இதுவாகும்.

மற்றோர் ஆட்டத்தில் 4ஆம் நிலை வீராங்கனை கோகோ காப் (அமெரிக்கா) 6-1, 6-2 என்ற நேர் செட்டில் மாக்டலேனா ப்ரெச்சை (போலந்து) வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

# இந்தியாவுடனான தொடர் விலகினார் ஹார் புரூக்!

மும்பை, ஜன. 23

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் விலகியுள்ளார்.

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. ஜனவரி 25ஆம் திகதி இரு அணிகள் இடையே முதல் டெஸ்ட் போட்டி



ஹைதராபாத்தில் தொடங்கவுள்ளது.

இந்நிலையில், இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து இங்கிலாந்து அணியின் ஹாரி புரூக் விலகியுள்ளார். இதனை அந்த நாட்டு கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் அணியிலிருந்து விலகியுள்ளார். ஹாரி புரூக் விலகிய நிலையில், அவருக்கு பதிலாக தொன் லோரன்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. (ஐ)

# 2023இற்கான ஐ. சி. சியின் அணிகள் அறிவிக்கப்பட்டன!

டுபாய், ஜன. 23

International Cricket Council

2023ஆம் ஆண்டுக் கான ரி -20 கிரிக்கெட் (ஆண்கள் மற்றும் பெண் கள்) அணியை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) அறிவித்துள்ளது.

ஆண்கள் அணியில் இலங்கை வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. பெண்கள் அணியின் தலைவியாக இலங்கையின் சமரி அத்தபத்து அறிவிக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டில் ரி -20 கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகளை தெரிவு செய்து 2023ஆம் ஆண்டுக்கான ரி -20 கிரிக்கெட் அணிகளை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

ஆண்கள் அணி -

யஷஸ்வி ஜெய்ஸ்வால் (இந்தியா), பில் சால்ட் (இங்கிலாந்து), நிக்கோலஸ் பூரன் (விக்கெட் காப்பாளர் - மேற்கிந்தியா), சூர்யகுமார் யாதவ் (அணித்தலைவர் - இந்தியா), மார்க் சாம்ப்மென் (நியூசிலாந்து), சிக்கந்தர் ராசா (சிம்பாப்வே), அல்பேஷ் ராம்ஜனி (உகாண்டா), மார்க் அடெய்ர் (அயர்லாந்து), ரவி பிஷ்னோய் (இந்தியா), ரிச்சர்ட் ங்க்வாரா (சிம்பாப்வே), அர்ஷ்தீப் சிங் (இந்தியா).

பெண்கள் அணி -

சமரி அத்தப்பத்து (அணித்தலைவர் - இலங்கை), பெத் மூனி (விக்கெட் காப்பாளர் - அவுஸ்திரேலியா), லாரா வோல்வார்ட் (தென்னாபிரிக்கா), ஹேலி மேத்யூஸ் (மேற்கிந்தியா), நாட் ஸ்கிவர்-பிரண்ட் (இங்கிலாந்து), அமெலியா கெர் (நியூசிலாந்து), எலிஸ் பெர்ரி (அவுஸ்திரேலியா), ஆஷ் கார்ட்னர் (அவுஸ்திரேலியா), தீப்தி சர்மா (இந்தியா), சோபி எக்லெஸ்டோன் (இங்கிலாந்து), மேகன் ஷட் (அவுஸ்திரேலியா). (ஐ)

# நியூஸிலாந்துடனான தொடர் பாகிஸ்தான் ஆறுதல் வெற்றி!

கிறிஸ்ட்சர்ச், ஜன. 23

நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் ஆறுதல் வெற்றியைப் பெற்றது.

பாகிஸ்தான் அணி, நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரின் முதல் 4 போட்டிகளிலும் நியூஸிலாந்து வெற்றி பெற்று தொடரில் 4-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் 5ஆவது மற்றும் கடைசி இருபது - 20 போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்றது. இதில் முதலில் விளையாடிய பாகிஸ்தான் 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்கள் எடுத்தது.

விக்கெட் காப்பாளர் ரிஸ்வான் 38, பாபர் அஸம் 13, பகர் ஷமான் 33, சாஹிப்ஸதா பர்ஹான் 19, அப்பாஸ் அப்ரிடி 14 ஓட்டங்கள் எடுத்தனர்.

நியூஸிலாந்து தரப்பில் ரிம் சௌதி, மேட் ஹென்றி, லக்கி பெர்குசன், இஷ் சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பின்னர் 135 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய நியூஸிலாந்து அணி 17.2 ஓவர்களில் 92 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

நியூஸிலாந்தின் பின் அலன் 22, ரிம் செய்பர்ட் 19, வில் யங் 12, கிளென் பிலிப்ஸ் 26 ஓட்டங்கள் சேர்த்து வீழ்ந்தனர்.

பாகிஸ்தான் அணி தரப்பில் இப்திகார் அகமது 3, ஷகீன் அப்ரிடி, முகமது நவாஸ் ஆகியோர் தலா 2, ஸமன் கான், உசாமா மிர் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இதன்மூலம் பாகிஸ்தான் 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இது பாகிஸ்தானுக்கு ஆறுதல் வெற்றியாக அமைந்தது. இருந்தபோதும் ரி - 20 தொடரை நியூஸிலாந்து 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் வீரர் இப்திகாரும், தொடர்நாயகனாக பின் அலனும் தெரிவாகினர். (ஐ)




# மேற்கிந்தியாவுடனான ஒருநாள் தொடர் ஆஸி. அணியில் இரு வீரர்கள் விலகல்!




சிட்னி, ஜன. 23

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் , 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடர்களில் விளையாடுகிறது.

இதில், இந்த இரு அணிகளுக்கு இடையே முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. அதன்படி நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றது. இதனையடுத்து இந்த இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி, வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தொடர் முடிவடைந்ததும் அடுத்ததாக இவ்விரு அணிகளுக்கு இடையே ஒருநாள் தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடருக்கான ஆஸ்திரேலிய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த தொடருக்காக அறிவிக்கப்பட்ட அவுஸ்திரேலிய அணியிலிருந்து கிளென் மக்ஸ்வெல் மற்றும் ஜே ரிச்சர்ட்சன் இருவரும் விலகியுள்ளனர்.

**அணி விவரம்**

ஸ்டீவ் ஸ்மித் (அணித்தலைவர்), டிராவிஸ் ஹெட் (உபதலைவர்), சீன் அபொட், சேவியர் பார்ட்லெட், நதன் எல்லிஸ், ஜேக் ப்ரேசர்-மெக்குர்க், கமரூன் கிரீன், அரோன் ஹார்டி, ஜோஷ் இங்கிலிஸ், மார்னஸ் லபுசாக்னே, லான்ஸ் மோரிஸ், மாட் ஷோர்ட், அடம் சம்பா (ஐ)

# ஈரான் நடத்திய தொடர் தாக்குதல்களால் மத்திய கிழக்கு சந்திக்கப் போகும் ஆபத்துகள்!



தற்போது நாம் இருக்கும் காலம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் காலம்.

கடந்த வாரம், இதுவரை நடந்திராத வகையில், ஈரான் தனது அண்டை நாடான பாகிஸ்தானின் எல்லையில் உள்ள சில பகுதிகளில் திடீரென ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியது.

இதற்கு, பாகிஸ்தானும் பதிலடி கொடுத்தது. அப்போது, அது ஏற்கெனவே பதற்றமாக உள்ள எல்லை வழியாக ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இந்தச் சம்பவம், இஸ்ரேல்-ஹமாஸ் மோதலால் ஏற்கெனவே பதற்றத்தால் சூழப்பட்டுள்ள மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மேலும் பிரச்னையை அதிகரித்தது.

இதில், ஈரானின் நோக்கம் மிகவும் தெளிவாக இருந்தது. அது, இதன் மூலம் நாட்டிற்குள் உள்ள தனது மக்களுக்கும் மற்ற நாடுகளுக்கும் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் என்பதுதான்.

ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் சர்வதேச மற்றும் மத்திய கிழக்கு விவகாரங்களின் பேராசிரியரான வாலி நாஸ்ர் பேசுகையில், ஈரான் தனது ராணுவத்தில் ஏவுகணைகள் இருப்பதை மட்டுமல்ல, அவற்றைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதையும் இந்தத் தாக்குதல்கள் மூலம் காட்டியுள்ளது," என்றார்.

"காஸா பகுதியில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடந்து வரும் மோதலுக்கு மத்தியில், ஈரானின் இந்தச் செயல்பாடு, இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் ஒரு செய்தியாக இருக்கலாம்."

மற்ற ஆய்வாளர்களைப் போலவே, வாலி நாஸ்ரும், "இந்த நேரத்தில் ஈரான் மேலும் பதற்றத்தை அதிகரிக்க விரும்பாது," என நம்புகிறார்.

**பதற்றம் பரவுவதற்கான வாய்ப்பு**

கடந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் ஹமாஸ் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 1,200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் காஸா மீது பதில் தாக்குதல்களை நடத்தியது. இந்த மோதல், மூன்று மாதங்கள் ஆகியும் நிற்கவில்லை. இதற்கிடையில், இந்தப் பதற்றம் இஸ்ரேல் மற்றும் காஸாவை தாண்டி அப்பகுதி முழுவதும் பரவக்கூடும் என்ற கவலைகள் எழுப்பப்பட்டன.

இதற்கிடையில், லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது தாக்குதல்கள் நடந்தன. ஏமனில் இருந்து ஹூத்தி ஆயுதக்குழுவினர் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் செங்கடல் வழியாகச் செல்லும் கப்பல்களைத் தாக்கத் தொடங்கினர்.








ஆனால் ஈரானோ, அதன் முக்கிய நட்பு சக்தியான ஹிஸ்புல்லாவோ, இஸ்ரேலை ஆதரிக்கும் அமெரிக்காவோ இந்த விஷயத்தை அதிகரிக்க விரும்பவில்லை. மத்திய கிழக்கில் உள்ள ஈரான், அதன் நட்பு சக்திகளைக் கொண்டு, ஒரு பிணாமி யுத்தமாக இந்த மோதலை நடத்தி வருகிறது.

**லீஸ் டூசெட்**

மத்திய கிழக்கில், ஈரானின் நிலைப்பாடு மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

அந்தப் பிராந்தியத்தில், பல்வேறு நாடுகளில் உள்ள ஆயுதக் குழுக்கள் ஈரானின் ஆதரவுடன் செயல்படுகின்றன. காஸாவில் ஹமாஸ், லெபனானில் ஹிஸ்புல்லா, ஏமனில் ஹூத்தி குழுக்கள், ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஆயுதக்குழுக்கள் ஆகியவை அனைத்தும் ஈரானின் ஆதரவுடன் இயங்கி வருகின்றன.

இந்தக் குழுக்களில் பெரும்பாலானவை மேற்கத்திய நாடுகளால் பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களின் ராணுவ பலமே ஈரான் வழங்கும் ஆயுதங்களும், பயிற்சிகளும்தான்.

இருந்தபோதிலும், இந்த ஒவ்வொரு குழுக்களுக்கும் தங்களுக்கென தனியான குறிக்கோள்களும், நோக்கமும் உள்ளன. சமீப காலமாக, இந்தக் குழுக்குள் அனைத்தும் தீவிரமாகச் செயல்படுகின்றன. இவை சில நேரங்களில், அந்தப் பிராந்தியத்தில் உள்ள பதற்றத்தை மேலும் அதிகரிக்கிறது.

அதனால், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பழிவாங்கும் நடவடிக்கையை அவர்கள் எதிர்கொள்ளாமல் இருக்க, இந்த அச்சுறுத்தல்களைக் குறைக்கவும் அவர்கள் தொடர் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(16ம் பக்கம் பார்க்க)



# வடக்கு, கிழக்கில் பட்டிப் பொங்கல் எப்படிக் கொண்டாடப்பட்டது?

நிலாந்தன்

இம்முறை வடக்குக் கிழக்கில் பட்டிப் பொங்கல் ஒரு போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. கிழக்கில் விவசாயிகள், பெண்கள், பண்ணையாளர்கள் அரசியல்வாதிகள், செயல்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து தலைகளில் பொங்கல் பானையை வைத்துக் கொண்டு ஊர்வலமாகப் போனார்கள். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே காணப்பட்டார்கள். மேச்சல் தரையை சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் நாட்டு மாடுகள் சுட்டும் வெட்டியும் வெங்காய வெடி வைத்தும் கொல்லப்படும் ஒரு பின்னணியில் நாட்டு மாடுகளை சுருக்குத் தடம் போட்டு பிடித்து செல்பவர்கள் யார் என்று தெரிந்திருந்தும் போலீசார் மற்றும் அரச அதிகாரிகள் அவர்களைத் தடுக்காத ஒரு பின்னணியில் பட்டிப் பொங்கலை சந்தோஷமாகக் கொண்டாட முடியாது என்று கூறி கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் விவசாயிகளும் பண்ணையாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள்.

மேச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் ஏற்கனவே 130 நாட்களைக் கடந்துவிட்ட ஒரு பின்னணியில் அண்மையில் பெருகிய மழை வெள்ளத்தில் போராட்டக்காரர்களின் கொட்டில் மிதக்கத் தொடங்கிவிட்டது. முழங்கால் அளவு நீரில் நின்றபடி போராடிய விவசாயிகள் பட்டிப் பொங்கலை ஒரு எதிர்ப்பு போராட்டமாக முன்னெடுத்திருக்கிறார்கள்.

கிழக்கு விவசாயிகளுக்கு ஆதரவாக வடக்கிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நல்லை ஆதீனச் சூழலில், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் செயற்பாட்டாளர்களும் கூடி நின்று தமது எதிர்ப்பைக்காட்டினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கே காணப்பட்டார்கள். வெவ்வேறு மதப் பிரிவுகளைச் சேர்ந்த மதத் தலைவர்களும் அங்கு காணப்பட்டார்கள்.

இது நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன், பொங்கல் திருநாளை முன்னிட்டு கிழக்கில் பெருமெடுப்பில் ஒரு பண்பாட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் ஆளுநராகிய செந்தில் தொண்டமான் அப் பண்பாட்டுப் பெருவிழாவை ஒழுங்குபடுத்தியிருந்தார். படகோட்டப் போட்டி, ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவுதல் போட்டி போன்றவற்றை ஒழுங்கு படுத்தியிருந்தார். நூற்றுக் கணக்கில் பொங்கல் பானைகளை வைத்து பெருமெடுப்பில் மெகா பொங்கல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. நூற்றுக்கணக்கான பெண்கள் ஒரே மைதானத்தில் நடனம் ஆடினார்கள். திருமலையில் அண்மைய தசாப்தங்களில் அது போன்ற ஒரு பண்பாட்டு விழா அதற்கு முன் நடந்ததில்லை என்று கூறப்படுகின்றது. அதாவது அந்த அளவு பெரிய ஒரு பண்பாட்டு விழா அதற்கு முன் நடந்தது இல்லை என்று கூறப்படுகிறது.

கிழக்கில் சிங்கள பௌத்த மயமாக்கல் பெருமளவுக்கு வெற்றி பெற்றிருக்கும் ஒரு மாவட்டம் திருக்கோணமலை. அங்கே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் ஒளிப்படம் தாங்கிய வாகனத்தை எடுத்துச் சென்றபோது இடையில் தாக்கப்பட்டார். அந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு பாதுகாப்பற்ற ஒரு மாவட்டத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமான் அப்படி ஒரு பிரம்மாண்டமான பொங்கல் விழாவை ஒழுங்குபடுத்தியது ஒரு பகுதி தமிழர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.



நமது பண்பாட்டைப் பாதுகாப்பதற்கு ஒரு ஆளுநர் வந்துவிட்டார் என்று அதை கொண்டாடியவர்கள் பலர் உண்டு. ஆனால் அவ்வாறு பொங்கலுக்கு சில நாட்களுக்கு முன் பெரும் எடுப்பில் ஒரு பண்பாட்டு விழா நடத்தப்பட்ட அதே மாகாணத்தில்தான், அதன் இன்னொரு பகுதியில் மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை அபகரிக்கப்படுகின்றது. அந்த மாவட்டத்தின் செல்வம் என்று வர்ணிக்கப்படும் நாட்டு மாடுகள் உணவின்றித் தவிக்கின்றன. சுருக்குத் தடம் போட்டு பிடிக்கப்படுகின்றன. அல்லது சுட்டும் வெட்டியும் கொல்லப்படுகின்றன. அல்லது வெங்காய வெடி என்ற வெடி வைத்து மாடுகளின் வாய் சிதைக்கப்படுகின்றது. இது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றன. இவ்வாறு கோமாதா என்று தமிழ் பண்பாட்டில் அழைக்கப்படும் மாடுகளையும் மேச்சல் நிலத்தையும் பாதுகாக்க முடியாத கிழக்கு மக்கள் பட்டிப் பொங்கலை ஒரு போராட்டமாக முன்னெடுத்தார்கள்.

அப்போராட்டம் வடக்கையும் கிழக்கையும் ஒப்பிட்டு அளவில் ஒருங்கிணைத்து வருகின்றது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்திற்கு பின் வடக்குக் கிழக்கும் இணைந்த ஒரு போராட்டமாக அது காணப்படுகின்றது. கிழக்கைப் போன்று வடக்கில் அது பேரெழுச்சியாக இருக்கவில்லைத்தான். எனினும் மேச்சல் தரை விவகாரம் வடக்கையும் கிழக்கையும் இணைத்திருக்கின்றது.

சில கிழமைகளுக்கு முன்பு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அப்போராட்டத்திற்கு ஆதரவாக மட்டக்களப்புக்குச் சென்றார்கள். போராட்டத்தில் ஈடுபடும் பண்ணையாளர்களோடு அமர்ந்திருந்து தனது சகோதரத்துவத்தை வெளிப்படுத்தினார்கள். போராட்டத்தில் ஈடுபட்ட பின் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வரும் வழியில் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். போராடப் போன மாணவர்களைக் கைது செய்த போலீஸ் அவர்களைத் தடுத்து வைத்திருந்தது. ஆனால்




நிலத்தை அபகரிக்கும் விவசாயிகளில் யாரையும் போலீஸ் கைது பண்ணியதாகத் தெரியவில்லை. மாடுகளைப் பிடிப்பவர்களையும் கொல்பவர்களையும் பொலீஸ் கைது பண்ணியதாகத் தெரியவில்லை. அந்த விவசாயிகளுக்கு ஆதரவாகவும் ஆன்ம பலமாகவும் காணப்படும் பௌத்த மத குருக்களை போலீஸ் கைது செய்வதாகவும் தெரியவில்லை.

மேச்சல் தரையை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் தனியாக சட்டத்தை மீறிவரும் விவசாயிகளால் மட்டும் முன்னெடுக்கப்படவில்லை. இதில் திணைக்களங்கள், அரசு அதிகாரிகள், அரச படைகள், போலீசார் போன்றவர்களின் மறைமுக ஒத்துழைப்பு உண்டு என்று பண்ணையாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அங்கு நீதிமன்றத்தின் உத்தரவுகள் வெளிப்படையாக மீறப்படுகின்றன. ஆனால் அதற்காக யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. அதைத்தான் திருமலை மறை மாவட்ட ஆயர் ஒரே நாடு இரண்டு சட்டங்கள் என்று வர்ணித்தார்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், கிழக்கில் பட்டிப்பொங்கலை ஒரு போராட்டமாக முன்னெடுத்தமை என்பது அங்கே ஆளுநரின் பண்பாட்டு பெருவிழாவை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது. நாட்டு மாடுகளை பாதுகாக்க முடியாத ஓர் ஆளுநர் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தி வருகிறார். தமிழ் பண்பாட்டில் அதிகம் மதிக்கப்படும் ஒரு வளர்ப்பு விலங்கு மாடுதான். தமிழ் மக்களின் வாழ்க்கையில் அது கோமாதா என்று அழைக்கப்படுகின்றது. அது வணங்கப்படுகின்றது. ஆனால் கிழக்கில் கோமாதாவுக்கு உணவும் இல்லை பாதுகாப்பும் இல்லை. மேய்ச்சல் தரைக்காகப் போராடத் தொடங்கிய பின் 124 நாட்களுக்குள் இதுவரை 252 மாடுகள் வரை கொல்லப்பட்டு விட்டதாக பண்ணையாளர்கள் கூறுகிறார்கள்.

அண்மையில் சாணக்கியன் தெரிவித்த ஒரு தகவலின்படி ஜனாதிபதி கேட்டாராம் ஏன் அந்த மாடுகளுக்கு புற்களை வேறு எங்கிருந்தாவது கொண்டு வந்து கொடுக்க முடியாதா என்று. இப்படித்தான் மேச்சல் தரை விவகாரத்தை ஒரு ஜனாதிபதி விளங்கி வைத்திருப்பார் என்றால், இந்த விவகாரத்துக்கு இப்போதைக்கு தீர்வு கிடைக்காது என்று பொருள்.

அண்மையில் குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள போலீஸ் உயர் மட்டத்தோடு ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்கள். அச்சந்திப்பு தமக்கு நம்பிக்கை ஊட்டுவதாக பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். சந்திப்பின் பின் திருப்பகரமான மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. போலீசார் இந்த விடயத்தில் அத்துமீறி வரும் சிங்கள விவசாயிகளின் பக்கம் நிற்பதாக தமிழ் விவசாயிகள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகிறார்கள். ஆனால் பொலீஸ் உயரதிகாரிகள் அதை மறுக்கின்றார்கள். மேற்படி சந்திப்பின் போது, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த விடயத்தில் ஏற்கனவே ஜனாதிபதி வாக்குறுதி வழங்கினார். எதுவும் நடக்கவில்லை. ஆளுநர் வாக்குறுதி வழங்கினார். எதுவும் நடக்கவில்லை. இப்பொழுது பொலீசார் வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள். பொறுத்திருந்து பார்க்கலாம்.

(ஆதவன் செய்தி)

# ஈரான் நடத்திய தொடர் தாக்குதல்களால்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**ஈரான்-பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றம்**

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையினர் பாகிஸ்தானின் எல்லையை முதலில் தாக்கிய பின், அண்டை நாடுகளான ஈரானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றம் தொடங்கியது.

இதில், ஈரான், பாகிஸ்தான் மீது மட்டும் ஏவுகணை கொண்டு தாக்குதல் நடத்தவில்லை. அது தனது நட்பு நாடுகளான ஈராக் மற்றும் சிரியா மீதும் தாக்குதல் நடத்தியது. ஈரான் அதைச் சுற்றியுள்ள நாடுகள்தான் எதிர்ப்பில் இருந்து காக்கும் நாடுகள் என்பதைப் புரிந்திருக்க வேண்டும்.

ஈரானின் இந்த அதிநவீன, அதி தீவிர படை, ஈராக்கின் வடக்கில் உள்ள சூர்திஸ்தான் பகுதியில் பல ஏவுகணைகளை ஏவியும், ட்ரோன்களை ஏவியும் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் புலனாய்வு மையத்தைக் குறிவைத்துதான் இந்தத் தாக்குதல்களைள் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

அதைத் தவிர, ஐஎஸ் (இஸ்லாமிய அரசு) உட்பட சிரியாவில் உள்ள கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில், ஈரான் எதிர்ப்பு பயங்கரவாத குழுக்களைக் குறிவைத்ததாகவும் ஈரான் தெரிவித்தது. ஈரானின் கூற்றுப்படி, அதன் ஒவ்வொரு நடவடிக்கைக்குப் பின்னாலும், ஒரு எதிர்வினை காரணமாக இருந்தது.

பாகிஸ்தான் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு விளக்கமளித்த ஈரான், தென்மேற்கு பாகிஸ்தானில் உள்ள ஈரான் வம்சாவளியைச் சேர்ந்த பலூச் கிளரச்சியாளர்களைக் குறிவைத்ததாக ஈரான் கூறியது.

“தாக்குதல் தவிர்க்க முடியாதது” என்று தெஹ்ரான் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான செயத் முகமது மராண்டி கூறுகிறார். கடந்த மாதம் ஈரானின் சிஸ்தான்-பலூசிஸ்தானில் நடந்த தாக்குதலில் 22 ஈரான் போலீஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.

ஈரானின் தெற்குப் பகுதியில் பலூச் தேசியவாதிகளின் தளங்கள் இருப்பதாக இரு தினங்களுக்கு முன்பு பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. அவற்றை “பயங்கரவாதிகளின் மறைவிடங்கள்” என பாகிஸ்தான் கூறியது. பல தசாப்தங்களாக எல்லையின் இருபுறமும் பதற்றம் நீடித்தது, ஆனால் இப்போது அது அதன் மோசமான கட்டத்தை எட்டியுள்ளது.

**ஈரான் தலைவர்களுக்கு கடினமான காலம்**

ஈராக் மற்றும் சிரியா, காஸாவிற்கு அருகில் உள்ளது. ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே தற்போது மோதல் நிலவி வருகிறது. பேராசிரியர் மராண்டி பேசுகையில், ‘ஈராக் மற்றும் சிரியாவில் நடந்த தாக்குதல்கள், கெர்மானில் நடக்கும் சம்பவங்களுக்கான பதில்” என்றார்.

கடந்த மாதம் அங்கு நடந்த ஒரு அரசியல் படுகொலையை அவர் குறிப்பிடுகிறார். இங்கே, ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் மூத்த நபரான சையத் ராசி மொசாவி படுகொலை செய்யப்பட்டார்.

இந்த மாதத் தொடக்கத்தில் காசிம் சுலைமானியின் கல்லறை மீது இரட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஈராக்கில் ட்ரோன் தாக்குதலில் அமெரிக்காவால் கொல்லப்பட்ட ஈரானின் உயர்மட்ட தளபதி சுலைமானி.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய அரசு பொறுப்பேற்றது. 1979இல் ஈரானில் நடந்த இஸ்லாமிய புரட்சிக்குப் பிறகு நடந்த மிக ஆபத்தான தாக்குதல் இது. இந்தப் பிராந்தியத்தைப் பற்றி விரிவான பகுப்பாய்வு செய்த அம்வாஸ் மீடியாவின் ஆசிரியர் முகமது அலி ஷபானி, “இந்தத் தாக்குதலுக்குக் கூடுதலாக, ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா தளபதிகள் கொல்லப்பட்டதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஈரான் மீது அழுத்தம் இருந்தது,” என்றார்.

மேலும், இனிவரும் காலங்களில் மேலும் பதற்றமான சூழலை காண்போம், என்றார். ஈரானில் அதிகாரத்தில் இருக்கும் உச்ச மதத் தலைவர்களுக்கு இது கடினமான நேரம். ஏனெனில் நாட்டில் பெண்கள் அதிக சுதந்திரம் கோரி பெரிய இயக்கங்களை நடத்தினர்.

சர்வதேச தடைகளால் ஈரானின் பொருளாதாரமும் அழுத்தத்தில் உள்ளது. ஊழல் வழக்குகள் மற்றும் தவறான நிர்வாகத்தால் பொருளாதாரம் மந்தமடைந்துள்ளது. இந்த மோதலில் பல முரண்பாடுகள் உள்ளன. அண்டை நாடுகளான இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுடன் பாகிஸ்தான் பதற்றம் கொண்டுள்ளது. இருவரும் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

**இப்போது ஈரானின் வியூகம் என்னவாக இருக்கும்?**

எதிரிப் படைகளுக்கு அடைக்கலம் கொடுப்பதாக இரு தரப்பிலும் நீண்ட நாட்களாக குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன.

கடந்த வாரம் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் அச்சுறுத்தல் அதிகரித்து வருவது தெரிகிறது. அத்தகைய சூழ்நிலையில், ஒன்றுக்கு மேற்பட்ட முனைகளில் பதற்றம் ஏற்பட்டால், பிராந்தியத்தில் நீண்ட கால மோதல் ஏற்படலாம்.

ஈராக்கில் உள்ள ஈரான் தளங்கள் மீது அமெரிக்காவின் தாக்குதல்களால் ஈரானின் முக்கியமான உள்கட்டமைப்பு அழிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

செங்கடலில் முக்கியமான கடல் வழித்தடங்கள் மீதான தாக்குதல்களுக்கு பதிலடியாக ஏமனில் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை பென்டகன் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் ஆயுதக் கையிருப்பில் நான்கில் ஒரு பங்கு அழிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருந்தபோதிலும், ஈரானும் அதன் நட்பு நாடுகளும் தோல்விகளைவிட வெற்றிகளைப் பெறுவதாக நம்புகின்றன. காஸாவில் பாலத்தீனர்களுடன் நிற்பது வளைகுடா நாடுகளில் ஈரானின் புகழை அதிகப்படுத்தியுள்ளது. ஏமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்களை தற்போது உலகமே பார்த்துக்கொண்டிருக்கிறது.

சர்வதேச விவகாரங்கள் தொடர்பான சிந்தனைக் களமாகச் செயல்படும் சத்தம் ஹவுஸில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவுக்கான திட்ட இயக்குநராக இருக்கிறார் சனம் வகில், “ஈரான் ஒரு பரந்த விளையாட்டை விளையாடுகிறது. காஸாவை கைப்பற்றிய பிறகு இஸ்ரேல் இன்னும் ஆக்ரோஷமாக மாறக்கூடும் என்று உணர்கிறது. எனவே அதுவொரு நீண்ட போரை எதிர்பார்க்கிறது, தயாராகிக் கொண்டிருக்கிறது,” என்றார்.

ஈரானின் நீண்ட கால இலக்குகளில் ஒன்று அமெரிக்காவை அதன் கொல்லைப்புறத்தில் இருந்து விலக்கி வைப்பது. மேலும், அது இஸ்ரேல், அமெரிக்காவுடன் நேரடி மோதலைத் தவிர்க்க வேண்டும். ●

